தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பிப்ரவரி 22-ல் கோடை காலத்தில் பயிரிடுவது குறித்து பயிற்சி

கோடை காலத்தில் பயிரிடும் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் வகையில், விவசாயிகளுக்கு பிப்ரவரி 22-ஆம் தேதி வரை பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இது குறித்து வேளாண் துறை வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில், 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

இவற்றில், 650-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள், நெல்லைப் பயிரிட்டு வருகின்றனர். இக்கிராமங்களில், கோடை காலத்தில் பயிரிடும் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் வகையில், விவசாயிகளை ஊக்குவிக்க, அந்தந்த ஒன்றியங்களில், ஜனவரி 22-ஆம் தேதி முதல் பிப்ரவரி 28-ஆம் தேதி வரை, கோடை காலப் பயிற்சி முகாம் நடத்த, வேளாண் துறை நிர்வாகம் முடிவு செய்து உள்ளது. முகாம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை, அந்தந்தப் பகுதி வேளாண் உதவியாளர்கள் செய்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### கோடையில் வறட்சியை சமாளிக்க மக்காச்சோளம் பயிரிடுங்கள்

திருவள்ளூர் மாவட்டத்தில் கோடைக்காலத்தில் ஏற்படும் வறட்சியை சமாளிக்க விவசாயிகள் மக்காச்சோளம் மற்றும் சிறு தானியங்கள், பயறு வகைகளை பயரிட்டு லாபம் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் அறிவுறுத்தினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாதாந்திர மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமை வகித்தார்.

இதில் பயறு வகை சாகுபடி, தீவனப் பயிர்கள் பயிரிடும் முறை மற்றும் வறட்சியைத் தாங்கும் விதை கடினப்படுத்தும் முறைகள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு குறும்படம் திரையிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பேசியது: திருவள்ளூர் மாவட்டத்தில் கோடைக்காலத்தில் வறட்சியை சமாளிக்க நெற்பயிருக்கு பதிலாக மக்காச்சோளம், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளை பயரிட்டு அதிக லாபம் பெற விவசாயிகள் முன்வர வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறை பல வட்டங்களில் செயல்படுத்தப்பட்டாலும் தொடர்ந்து அனைத்து வட்டங்களிலும் செயல்படுத்த விவசாயிகள் ஆர்வத்துடன் செயல்பட வேண்டும் என்றார் அவர். பாண்டூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க வேண்டும். ஏரிக்கு தண்ணீர் வர நீர்வரத்துக் கால்வாயும் அமைத்து தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஏரிகளில் நீர்வள, நிலவளத் திட்டம் நபார்டு திட்டத்தின் கீழ் நடைபெறும் கரைகளைப் பலப்படுத்துதல், கரை அமைத்தல் போன்ற பணிகளை கண்காணிக்க பொதுப்பணித்துறை அலுவலர் மற்றும் திருவள்ளூர் கோட்டாட்சியர்கள், அலுவலர்கள் குழுவாக செயல்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் செல்வமணி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

### "அனைத்துப் பயிர்களுக்கும் காப்பீடு தேவை

சிவகங்கை மாவட்டத்தில் பயிரிடப்படும் அனைத்து வகைப் பயிர்களுக்கும் காப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து விவசாயிகள் மற்றும்

விவசாய சங்கப் பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் பருத்தி சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் துறையினரால் விதைகள் வழங்கப்படுவதில்லை. ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து விதைகளைவாங்கிப் பயிரிட வேண்டிய நிலை உள்ளது. விவசாயிகளின் தேவையை அறிந்து விவசாயத் துறையினர் செயல்படுவதில்லை. இளையான்குடி பகுதியில் அதிக அளவில் பருத்தி கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் இதற்கான விற்பனை நிலையம் பரமக்குடியில் உள்ளது. இளையான்குடியில் விற்பனை நிலையம் அமைக்க வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தில் சில இடங்களில் சில பயிர்களுக்கு மட்டுமே காப்பீடு ஏற்கப்படுகிறது.

தேவகோட்டை பகுதியில் வாழை பெருமளவு பயிரிடப்படுகிறது ஆனால் வாழைப் பயிருக்கு காப்பீடு செய்ய முடியவில்லை. இப்பகுதியில் உள்ள கண்மாய்கள் வறண்டு போனதால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயம் மேற்கொள்வதில் மட்டுமின்றி கால்நடைகளுக்கும் தண்ணீர் வழங்க முடியவில்லை. எனவே ஊராட்சிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்க வேண்டும். தேவகோட்டை பகுதியில் 16 வருவாய் கிராமங்களில் பயிர்களுக்கு காப்பீடு இல்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.25ஆயிரம் நிவாரணம் வழங்க அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்க வேண்டும். அத்துடன் பயிர்க்கடன் மற்றும் வட்டியை ரத்து செய்ய வேண்டும்.

விவசாயத்திற்காக வைக்கப்பட்ட நகைகளை ஏலம் விடுவதை தள்ளி வைக்க வேண்டும் என பலமுறை விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தும் வங்கிகள் தொடர்ந்து ஏலத்தை நடத்தி வருகின்றன. நகை கடன் ஏலத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆட்சியர் உத்தரவிட வேண்டும் என்றனர்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் பேசியதாவது: வைகை ஆற்றின் மூலம் சிவகங்கை மாவட்ட

குடிநீர் தேவைக்கு தரவேண்டிய பங்கைப் பெற மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தேவகோட்டை பகுதியில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் கால்நடைகளுக்குத் தேவைப்படும் தண்ணீரை வழங்க தொட்டி கட்டவும், வெளி மாவட்டங்களில் இருந்து வைக்கோல் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளுக்குத் தேவைப்படும் பருத்தி விதைகள் குறித்து தெரிவித்தால் அவற்றை இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம் ஆகிய இடங்களில் உள்ள டெப்போ மூலம் வழங்க நிர்வாகம் தயாராக உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் சில பயிர்களுக்கு மட்டும் இன்சூரன்ஸ் பெறப்படுகிறது. இதன்படி வரும் ஜன.31ஆம் தேதி வரை மிளகாய் பயிருக்கும், மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம் ஆகிய ஊர்களில் அக்.2013 முதல் பிப்.2014 வரை பயிரிடப்படும் வாழைக்கு பிப்.28ஆம் தேதி வரையிலும், ஜன.14ஆம் தேதி முதல் ஜூன் 14ஆம் தேதி வரை நடவு, மறுதாம்பு செய்யப்படும் கரும்புக்கு ஜூன் 30ஆம் தேதி வரையிலும் இன்சூரன்ஸ் செலுத்தலாம். அனைத்து பகுதியிலும் பயிரிடப்படும் வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு தேவை என அரசுக்கு எழுதப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

## ரூ.20 க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் மானாமதுரை கூட்டுறவு பண்டகசாலை 180 மெட்ரிக் டன் விற்று சாதனை

தமிழக அரசின் ரூ. 20 க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம் விற்பனையில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கூட்டுறவு பண்டகசாலை 180 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்து மாநிலத்தில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.

கடந்தாண்டு மே மாதம் தமிழகத்தில் சாதாரண ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்கள் பயனடையும் வகையில் ரூ 20 க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம் முதல்வர் ஜெயலலிதாவால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் இந்த அரிசி வழங்கும் திட்டத்துக்கு போதிய வரவேற்பு கிடைக்காமல் அரிசி விற்பனையாகாமல் தேங்கியது. ரேஷன்கடைகளில் வழங்கப்படும் அரிசியைப் போன்றே ரூ 20 க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தில் விற்பனை செய்யப்படும் அரிசியின் தரம் இருப்பதால் தான் இந்த நிலைமை என

தெரிவிக்கப்பட்டது. இந் நிலையில் மானாமதுரை கூட்டுறவு பண்டகசாலை இந்த அரிசி விற்பனைத் திட்டத்தில் மாநில அளவில் சாதனை படைத்துள்ளது.

இது குறித்து பண்டகசாலையின் தலைவர் சின்னை மாரியப்பன் கூறியதாவது:

முதல்வர் ஜெயலலிதாவால் தொடங்கி வைக்கப்பட்ட ரூ 20 க்கு உயர்ரக அரிசி வழங்கும் திட்டம், மானாமதுரை கூட்டுறவு பண்டகசாலை அலுவலகத்திலேயே செயல்பட்டு வருகிறது. திட்டம் தொடங்கப்பட்ட தேதி முதல் கடந்த டிசம்பர் வரை 180 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இந் நிறுவனத்துக்கு கூட்டுறவுத்துறை மூலம் முதல்வரின் கேடயம் வழங்கப்பட்டுள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயனடையும் வகையில் ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்தின் அனைத்து நாள்களிலும் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றார்.

**வாழைக்காய் விலை வீழ்ச்சி: சேவூரில் ஏலம் ஒத்திவைப்பு**

வாழைக்காய் விலை வீழ்ச்சியடைந்ததால், சேவூரில் வாழைக்காய் ஏலம் வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்பட்டது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் சேவூர் ஏல மையத்தில் வாழைக்காய் ஏலம் வராந்தோறும் வெள்ளிக்கிழமை நடைபெற்று வருகிறது. சென்ற வாரம் தைப் பொங்கலையொட்டி ஏலத்திற்கு தாற்காலிகமாக விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு ஏராளமான வாழைத்தார்கள் வந்திருந்தன. இதில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நேந்திரன் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், கிலோ ரூ.25-க்கு மேல் ஏலம் போனது. ஆனால் தற்போது நேந்திரன் வாழை கிலோ ஒன்றுக்கு ரூ.3 முதல் ரூ.15 வரை மட்டுமே ஏலம் போனது.

வாழைக்காய் விலை வீழ்ச்சி அடைந்ததால், விவசாயிகள் ஆத்திரமடைந்து, நியாயமான விலை உயர்வு கிடைக்கும் வரை ஏலத்தில் பங்கேற்க மாட்டோம் என்றனர்.

இதுகுறித்து, வியாபாரிகள் கூறியது: கேரளத்தில் நேந்திரன் வாழைக்காய்க்கு உரிய விலை கிடைப்பதில்லை, இதற்கு மேல் விலை கொடுத்தால், எங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்றனர்.

இதுபற்றி தகவலறிந்த ஏ.சி.எம்.எஸ். சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியம், மேலாளர் சண்முகம் ஆகியோர் இரு தரப்பினரிடையே பேச்சுவார்த்தை நடத்தினார். அதையடுத்து, தற்போது ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டு, சனிக்கிழமை (ஜனவரி 25) மீண்டும் ஏலம் நடைபெறும் என்றார்.

### பவானியில் கால்நடைகளுக்கு சலுகை விலையில் வைக்கோல்

கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் மற்றும் பொது மக்களுக்கு சலுகை விலையில் வைக்கோல் விற்பனை செய்யும் உலர் தீவனக் கிடங்கு திறப்பு விழா, பவானி வர்ணபுரம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. mஈரோடு மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பி.ஜெயராமன் தலைமை வகித்தார். இக் கிடங்கைத் திறந்துவைத்த பவானி எம்எல்ஏ பி.ஜி. நாராயணன், முதல் விற்பனையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், வறட்சியால் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு, பால் உற்பத்தி குறைவைத் தடுக்கவும், கால்நடைகள் விற்பனை செய்வதைத் தடுக்கவும் இக் கிடங்கு திறக்கப்பட்டுள்ளது.

உலர் தீவனக் கிடங்குகள் தமிழகத்தில் ரூ.12.5 கோடி செலவில் 125 இடங்களில் திறக்கப்படுகின்றன. ஈரோடு மாவட்டத்தில் தலா ரூ.10 லட்சம் செலவில் பவானி, பெருந்துறை, எழுமாத்தூர், நம்பியூர் மற்றும் பொலவக்காளிபாளையத்தில் தீவனக் கிடங்குகள் திறக்கப்படுகின்றன. ஒரு கால்நடைக்கு நாளொன்றுக்கு 3 கிலோ வீதம் 7 நாட்களுக்கு 21 கிலோவும், அதிகமாக 5 கால்நடைகளுக்கு 105 கிலோ வைக்கோல் வழங்கப்படுகிறது. சந்தையில் ரூ.10-க்கு விற்கப்படும் வைக்கோல் இங்கு ரூ.2-க்கு தொடர்ந்து 3 மாதங்களுக்கு விற்கப்படும். மேலும், கால்நடைகள்

வைத்துள்ளோர் அருகாமையில் உள்ள தீவனக் கிடங்கை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். முன்னதாக, கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் கே.பிரகாசம் வரவேற்றார். உதவி இயக்குநர் ஏ.முருகன் திட்டம் குறித்து விளக்கினார். உதவி இயக்குநர் டி.பழனிச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் வெளி மாநில வியாபாரிகள் குவிந்தனர்**

கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தையில் வெளி மாநில வியாபாரிகள் வியாழக்கிழமை குவிந்தனர். அதிகபட்சமாக பசு மாடு ரூ.45,000-க்கு விற்பனையானது. 2 மாதங்களுக்குப் பின்னர் புதன்கிழமை முதல் இச் சந்தை இயங்க, மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியது. இறைச்சிக்கான மாடுகள் புதன்கிழமை அதிகளவில் விற்பனையாயின. இந் நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற சந்தையில் 300 பசுக்களும், 300 எருமைகளும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. ஈரோடு, நாமக்கல், சேலம், திருச்சி, திருப்பூர், கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் தங்களது மாடுகளைக் கொண்டு வந்திருந்தனர். ஆந்திரம், கர்நாடகம், கோவா மற்றும் கேரள மாநில வியாபாரிகள் அதிகமாக வந்திருந்தனர். பசு மாடு அதிகபட்சமாக ரூ.45,000-க்கு விலைபோயின. எருமை ரூ.18,000 முதல் ரூ.36,000 வரை விற்பனையானது. வெளி மாநில வியாபாரிகள் அதிக எண்ணிக்கையில் வந்திருந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் பூக்கள் விலை கடும் சரிவு**

தருமபுரி மாவட்டத்தில் விளைச்சல் அதிகரிப்பு காரணமாக பூக்களின் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தொப்பூர், நல்லம்பள்ளி, கடத்தூர், பொம்மிடி, இண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சம்பங்கி, சாமந்தி, செண்டுமல்லி உள்பட பல்வேறு வகையான பூக்கள் பயிரிடப்பட்டு வருகிறது.

பூக்களைப் பயிரிட்டால் அதிக லாபம் கிடைக்கிறது என்பதால், தொப்பூர் பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் இதைப் பயிரிட அதிகளவில் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த பொங்கல் பண்டிகையின் போது, பூக்களின் தேவை பலமடங்கு அதிகரித்ததன் விளைவால் கிலோ சம்பங்கி ரூ.120-க்கும், மல்லி ரூ.300 வரையிலும் விற்கப்பட்டது. பண்டிகை சீசன் முடிவுக்கு வந்ததும் தேவை குறைந்ததுடன், மாவட்டம் மட்டுமன்றி வெளி இடங்களில் இருந்தும் வரத்து அதிகளவில் இருப்பதால் தருமபுரி மொத்த பூ சந்தையில் வெள்ளிக்கிழமை சாமந்திப் பூ கிலோ ரூ.20 முதல் ரூ.25-க்கும், சம்பங்கி ரூ.30-க்கும், காக்கா மல்லி ரூ.120-க்கும், கனகாம்பரம் ரூ.140-க்கும், செண்டு மல்லி ரூ.5-க்கும் விற்பனையானது.

இதுகுறித்து தருமபுரி பூ மொத்த வியாபாரி ஜி.மாது கூறியது:

பொங்கல் பண்டிகையின் போது வரத்து அதிகளவில் இருந்தும், தேவை கடுமையாக இருந்ததால் பூக்களுக்கு நல்ல விலை கிடைத்தது. தற்போது வரத்து அதிகரித்து, தேவை குறைந்துள்ளதால் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது.

அடுத்த வாரம் முகூர்த்த சீசன் தொடங்கிய பிறகு சீரான விலையை பூக்கள் எட்டும் என்றார் அவர்.

## சிறுதானிய பொருள்கள் தயாரிப்போர் கவனத்துக்குசிறுதானிய பொருள்கள் தயாரிப்போர் கவனத்துக்கு

சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்க விரும்புவோர் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் நவீன இயந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தானிய உற்பத்தி மூலம் ஊட்டச்சத்து மேம்பாடு முனைப்புத் திட்டத்துக்கு சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்டப் பொருள்கள் தயாரிப்பதற்கான

இயந்திரம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்டது. இந்த இயந்திரம் நாமக்கல் முத்துக்காப்பட்டியில் செயல்படும் ரோஜா கறவை மாடு வளர்ப்போர் குழுவின் பொறுப்பில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அந்தக் குழு மூலம் பாரம்பரிய உணவுப் பொருள்களான கம்பு லட்டு, தினை லட்டு, சாமை லட்டு, பாசிப் பயறு லட்டு, சோளம் முறுக்கு, சோளம் வடகம், தினை தோசை மிக்ஸ், சாமை தோசை மிக்ஸ், குதிரை வாலி தோசை மிக்ஸ், இட்லி பொடி, மக்காச்சோள பாயாச மிக்ஸ் ஆகிய பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

பாரம்பரிய உணவுப் பொருள்கள் தயாரிக்க விருப்பமுள்ள வேளாண் விவசாயிகள் இந்த இயந்திரத்தை பயன்படுத்தி மாவு அரைக்கலாம்.

ஒரு கிலோ மாவு அரைக்க ரூ.4 வசூலிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு நாமக்கல் முத்துகாபட்டியிலுள்ள இந்திய பாரம்பரிய சமையல் கூடத்தை நேரிலோ அல்லது 9488616786, 04286-266244, 266345, 266650 ஆகிய தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தக்காளி விலை கடும் சரிவு

தக்காளி விலை கடுமையாகச் சரிவடைந்துள்ளது. ஒசூர் உழவர் சந்தையில் வெள்ளிக்கிழமை தக்காளி கிலோ ரூ.1.50-க்கு விற்பனை செய்யப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பேரிகை, கெலமங்கலம், பாகலூர், தளி, ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி, சூளகிரி, அஞ்செட்டி மற்றும் சுற்று வட்டாரக் கிராமங்களில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களாக தக்காளி கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், தற்போது விளைச்சல் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தக்காளி விலை கடுமையாகச் சரிந்துள்ளது.

ஒசூர், சூளகிரி, ராயக்கோட்டை தக்காளி மண்டிகளுக்கு தினமும் 18 முதல் 20 லாரிகளில் தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

பொங்கல் பண்டிகைக்கு முன்னர் வரை தக்காளி கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த ஒரு வாரமாக கிலோ ரூ.2-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், ஒசூர் உழவர் சந்தையில் வெள்ளிக்கிழமை ரூ.1.50-க்கு ஒரு கிலோ தக்காளி விற்பனை செய்யப்பட்டது. 25 கிலோ கொண்ட தக்காளி கூடை ரூ.30 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது.

விலை வீழ்ச்சியால் தக்காளி பயிரிட்ட விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஓர் ஏக்கர் தக்காளி பயிரிட ரூ.10 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை செலவாகும். விலை சரிந்துள்ளத நிலையில், செலவிட்ட பணமாவது கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

வெங்காயம் விலை சரிவு:

ஒசூரில் கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. கர்நாடக மாநிலம், பெல்லாரி மாவட்டத்திலிருந்து அதிகளவில் வெங்காயம் கொண்டு வரப்பட்டதால், விலை படிப்படியாகக் குறைந்து கடந்த மாதம் கிலோ ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

காய்கறிகள் விலையும் வீழ்ச்சி: ஒசூர் உழவர் சந்தையில் வெள்ளிக்கிழமை முட்டைகோஸ் கிலோ ரூ.4-க்கும், செப்செப் கிலோ ரூ.5-க்கும், கத்தரிக்காய் கிலோ ரூ.4-க்கும், சுரைக்காய் கிலோ ரூ.6-க்கும், கேரட் கிலோ ரூ.10-க்கும், பீன்ஸ் கிலோ ரூ.14-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து பூனப்பள்ளியைச் சேர்ந்த விவசாயி சீனிவாச ரெட்டி கூறியது:

ஒசூரில் விவசாயிகள் அதிக அளவில் காய்கறிகளைப் பயிரிட்டு வருகின்றனர். கர்நாடகத்தில் உள்ளதைப் போன்று, தமிழக அரசு சார்பில் காய்கறி ஒழுங்குமுறை

விற்பனை நிலையம் அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகிறோம்.

ஆனால், பத்தளப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான மொத்த விற்பனை அங்காடியில் வியாபாரிகள்தான் காய்கறிகளின் விலையை நிர்ணயம் செய்கின்றனர்.

இதனால், விவசாயிகளின் வாழ்வில் உயர்வு இல்லை.

ஒசூரில் ஆண்டு முழுவதும் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காய்கறிகள் பயிரிடப்பட்டு, தினமும் சுமார் 100 முதல் 150 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக சென்னை கோயம்பேடு, திருச்சி, கோவை, மும்பை, திருவனந்தபுரம் பெங்களூர் உள்ளிட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

ஒசூரில் அரசு சார்பில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தால், காய்கறிகள் பயிரிடும் விவசாயிகள் பலனடைவர் என்றார் அவர்.

## கரும்பு கொள்முதல் விலையை குறைக்காமல் வழங்க வேண்டும்

கரும்பு கொள்முதல் விலையை குறைக்காமல் விவசாயிகளிடம் வழங்க வேண்டும் என்று குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசியது:

செங்கமுத்து (அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர்):

கரும்புக்கு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ. 2650 வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், கோத்தாரி ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு ரூ. 2250 மட்டுமே வழங்கி வருகிறது. இதை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பிப்ரவரி மாதத்தில்தான் நெல், மக்காச்சோளம், பருத்தி அறுவடை

செய்யப்படும். எனவே, இந்த மாதத்தில் மட்டும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை செயல்படுத்துவதை நிறுத்தி வைக்க வேண்டும்.

அரியலூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தேவையான அளவு திறக்க வேண்டும். மேலும், குறைவாக நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்காக நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களை செயல்படுத்த வேண்டும். நெல் உலர் இயந்திரம் ஒவ்வொரு கொள்முதல் நிலையத்துக்கும் வழங்க வேண்டும். மத்திய அரசு வேளாண் காப்பீட்டுத் திட்டத்துக்கு பிரீமியத்தை 2% உயர்த்தி உள்ளது. அதை குறைத்து பழைய நிலையே நீடிக்கச் செய்ய வேண்டும்.

பூ. விசுவநாதன் (ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர்):

செந்துறை வட்டம், மணப்பத்தூரில் உள்ள பெரிய ஏரி, பாப்பாக்குளம் ஆகியவற்றுக்கு வரும் வரத்து வாய்க்கால் தூர்ந்து போய் உள்ளது. தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை நீர் மணப்பத்தூர் ஏரிக்கு வருவதில்லை. வந்தாலும் தண்ணீர் ஏரியில் நிற்பதில்லை. எனவே, குழுமூருக்கும், மணப்பத்தூருக்கும் இடையே ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும்.

சுக்கிரன் ஏரி நீரை நம்பி 15-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது ஏரியில் தண்ணீர் வரத்து இல்லை. இதனால், நெற்பயிர் கருகி வருகிறது. எனவே, சுக்கிரன் ஏரியில் தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடந்த 2012 ஆம் ஆண்டில் சாகுபடி செய்து நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்.

ஆட்சியர்: அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்டத்தின் கீழ் இதுவரை 33,669 பேர் பயனடைந்துள்ளனர். இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருவாய்த் துறை அதிகாரிகள் கிராமங்களுக்கு மக்களை நேரடியாக தேடிச் சென்று அவர்களது குறைகளை மனுக்கள் மூலம் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு கண்டு வருகிறார்கள். இன்று பெறப்பட்ட 55 மனுக்களுக்கும் உடனடி தீர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் தகுதியுடைய நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உணவு தானிய உற்பத்தியை பெருக்க நடப்பு கோடை பருவத்தில் ஜனவரி மாதம் முதல் மார்ச் 10 ஆம் தேதி வரை அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் கோடை பயிர் முனைப்பு முகாம் நடைபெற உள்ளது. இதன் மூலம் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கி உணவு தானிய பயிர்களான நெல் 500 ஹெக்டேரிலும், தானியம் 2100 ஹெக்டேரிலும், பயறு வகைகள் 12,200 ஹெக்டேரிலும் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், உதவி இயக்குநர் மல்லிகா, தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயத்துக்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தல்

விவசாயத்துக்கு வாய்க்கால்களில் தண்ணீர் திறக்க வேண்டுமென குளித்தலை பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர்.

கரூர் மாவட்டம், குளித்தலை கோட்டாட்சியர்  அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்  வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார்.

இக்கூட்டம் நடைபெறும்போது, கூட்ட  அரங்கத்துக்குள் வந்த மருதூர் பேரூராட்சித் தலைவர் ஆ. சம்பத், திமுக முன்னாள் ஒன்றியச் செயலர் த. திருநாவுக்கரசு, விவசாயிகள் எம். சண்முகம் உள்ளிட்டோர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து பேசியது:

ஆற்றில் அதிகப்படியாக மணல் அள்ளுவதால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வீடு மற்றும் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லை. இதனால் முப்போகம் செய்யப்பட்ட விவசாயம், ஒருபோகம் மட்டுமே செய்யும் நிலை உள்ளது.

குளித்தலை உள்ளிட்ட கரூர் மாவட்ட பகுதியில் தற்போது பணப் பயிர்களான வாழை, வெற்றிலை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இப்பயிர்களை காப்பாற்ற ஜன. 28 ஆம் தேதி மேட்டூர் அணை மூடப்பட்ட பின்னரும், விவசாயத்துக்காக மீண்டும் அணை திறக்கப்படும் வரையிலும் இப்பகுதியில் உள்ள வாய்க்கால்களில் தண்ணீர் திறக்க வேண்டும்.

தொடர்ந்து தண்ணீர் வழங்க முடியாவிட்டாலும், ஒரு மாதத்துக்கு 10 நாள்களுக்காவது தண்ணீர் திறந்துவிட வேண்டும். இல்லையெனில், பயிர்கள் முற்றிலும் காய்ந்துபோகும் நிலை ஏற்படும். இதனால், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய ஆபத்தான சூழ்நிலை உண்டாகும் என்றனர்.

இதேகோரிக்கையை வலியுறுத்தி விவசாயி ஆர். சுப்பிரமணியன் உள்ளிட்டோர் மனு அளித்தனர்.

கரூர் பகுதி விவசாயிகள்: கரூர் வெங்கமேடு அருகேயுள்ள குளத்துப்பாளையம் பகுதியில் உள்ள சாயப்பட்டறைகளில் இருந்து, சாயக்கழிவுநீர் பள்ளாப்பாளையம் ராஜவாய்க்காலில் கலக்கிறது. இதனால் இப்பகுதியில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சாயப்பட்டறைகளில் பறக்கும்படை அதிகாரிகள் ஆய்வு செய்து மின் இணைப்புகளை துண்டித்தும், சாயப்பட்டறை உரிமையாளர்கள் ஜெனரேட்டர் உதவியுடன் தங்கள் பட்டறைகளை இயக்கி வருகின்றனர்.

இதுகுறித்து மாசுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் தெரிவித்தும், ஆய்வு செய்யப்பட்ட வாய்க்கால் நீரின் அறிக்கையை வழங்கியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்க அவர்கள் முன்வரவில்லை எனக்கூறி, சாயநீர் கலந்த வாய்க்கால் நீரை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தியிடம் காட்டி இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த மாவட்ட ஆட்சியர், உடனடியாக இப்பகுதியில் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

விவசாயி ராஜாராம்: விவசாயிகள் அளிக்கும் கோரிக்கை மனுக்களுக்கு இக்கூட்டத்தில் சில அதிகாரிகள் உரிய பதில் தருவதில்லை. மனுக்கள் குறித்து எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை. எனவே, இதுபோன்ற அதிகாரிகள் மீது மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

விவசாயி மா. வீரமலை உள்ளிட்டோர்: குளித்தலை நகர மற்றும் கிராமப் பகுதிகளில் தெரு நாய்கள் அதிகரித்து விட்டது. இந்த நாய்கள் வீட்டில் இருக்கும் ஆடு மாடுகளை கடிப்பதோடு, மனிதர்களையும் கடிக்கிறது. இதனால் பொதுமக்கள் தெருக்களில் நடக்கவே அச்சப்படுகின்றனர். மேலும், வாகனங்களில் செல்வோர் விபத்துக்குள்ளாகின்றனர். இப்பிரச்னை கரூர் மாவட்டம் முழுவதும் உள்ளது. எனவே, இந்த நாய்களை ஒழிக்க நடவடிக்க எடுக்க வேண்டும் என்றனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர்: நாய்களை பிடித்து அதற்கு கருத்தடை செய்து, மேலும் அது இனப்பெருக்கம் செய்யாமல் தடுக்க மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். அதை அழிக்க முடியாது என்றார்.

விவசாயி வி.கே. தங்கவேல்: தரகம்பட்டி பகுதியில் உள்ள அரசு மதுபானக் கடைகள் அரசு அறிவித்த நேரத்துக்கு முன்னதாக காலை 6 மணிக்கே திறக்கப்பட்டுகிறது என்றார்.

குளித்தலை கோட்டாட்சியரிடம் இது குறித்து தெரிவித்து உடனடியாக இப்பகுதியில் ஆய்வு செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர்.

விவசாயி ஏ.வி. கோபாலதேசிகன்: குளித்தலை நகராட்சி எல்லைக்குள் கட்டடங்கள் கட்டும்போது அந்த மனை இருக்கும் இடத்தருகே கால்வாய்கள் ஏதும் இருப்பின், அந்த மனைக்கான வரைபடத்தில் கால்வாய்கள் இருக்குமிடம் குறிப்பிட்டு காட்டப்படுவதில்லை. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டால் கால்வாய் இப்போது பயன்பாட்டில் இல்லையென தெரிவிக்கின்றனர். இதனால் இவ்விடத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டால் அது ஆக்கிரமிப்பாகக் கருதப்பட்டு இடிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே, வீட்டுமனைக்கான

வரைபடங்களில் கால்வாய்கள் இருக்குமிடம் குறிப்பிட்டு காட்ட வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாகத் தெரிவித்து, இதுபோல் அளிக்கப்படும் கட்டட வரைபடங்களில் கால்வாய்கள் உள்ள இடம் குறிப்பிட்டு காட்ட வேண்டும். இல்லையெனில் வரைபடம் அளிக்கும் அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதையடுத்து, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பண்ணை இயந்திரமாக்குதல் திட்டத்தில் 7 விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் வழங்கினார்.

### காலிபிளவர் விலை வீழ்ச்சி

விழுப்புரம் மாவட்டத்தில் காலிபிளவர் விளைச்சல் அதிகரிப்பால், விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப் பகுதிகளிலும், ஒட்டன்சத்திரம், பழனி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் காலிபிளவர் விவசாயம் நடைபெற்று வருகிறது. காலிபிளவர் பயிரிட்டு 90 நாள்களில் பூக்கள் பறிக்க முடியும். பனி அதிகம் உள்ள இடங்களில்தான் காலிபிளவர் விளைச்சல் அதிகம் இருக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். இந்த பூ வெளியில் இருந்து விழுப்புரம் மாவட்டத்துக்கு கொண்டு வரப்படுவதால் ரூ.20 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. காய்கறி மார்க்கெட் பகுதிகளிலேயே சில முக்கிய கடைகளில் மட்டுமே இந்தப் பூ கிடைக்கும்.

ஆனால் தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் கண்டமங்கலம் பகுதிகளிலும் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி உள்ள இடங்களிலும் காலிபிளவர் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாக அதிகம் நிலவிய பனி காரணமாகவும் விளைச்சல்கள் அமோகமாக உள்ளன. வரத்து அதிகரிப்பால் காலிபிளவர் பூ ரூ.10 மற்றும் ரூ.12 ஆகிய விலைகளில் விற்பனையாகிறது.

மேலும் விழுப்புரத்தில் பழைய பேருந்து நிலையம் அருகில் மற்றும் பல்வேறு இடங்களில் காலிபிளவரை கொட்டி வைத்துக் கொண்டு கூவி, கூவி வியாபாரம் செய்து வருகின்றனர். காலிபிளவர் விளைச்சல் அதிகரித்து விலை குறைந்துள்ளதால் பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். ஆனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### கரும்பு நிர்ணய விலையை வழங்காவிட்டால் நடவடிக்கை

அரசு அறிவித்த விலையை வழங்கா விட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடலூர் மாவட்ட வேளாண் குறைகேட்புக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மனோகரன், வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், கால்நடைத் துறை இணை இயக்குநர் மதிவாணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ரேணுகாம்பாள், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அசோகன் மற்றும் பல்வேறு அரசுத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

விவசாயிகளின் கோரிக்கை விவரம்:

மாதவன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு இன்சூரன்ஸ் தொகை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு 2 மாதங்களுக்கு முன்பு அனுப்பிவைக்கப்பட்டும். இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. காப்பீட்டுத் தொகையை வழங்கவும் பயனாளிகளின் பட்டியலை சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் ஒட்டவும் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

ஆட்சியர்: விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் தொகை இரண்டு நாள்களில் வழங்கப்படும். பட்டியல் ஒட்ட கூட்டுறவுத்துறை உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும்.

மாதவன்: நடப்பு அரவை பருவத்துக்கு அரசு அறிவித்த விலையை வழங்க தனியார் சர்க்கரை ஆலைகள் மறுத்து வருகின்றன. ரூ.2,650 விலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த ஆண்டு விலையான ரூ.2,100 மட்டுமே வழங்கப்படும் தனியார் சர்க்கரை ஆலைகள் கூறுகின்றன. மேலும் விவசாயிகளிடமிருந்து வாங்கிய கரும்புக்கு 15 நாள்களில் உரிய தொகையை முழுமையாக வழங்க அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட வேண்டும்.

இதேபோல் இங்கு கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் ஆலைகளுக்கு கரும்பு வழங்கி, அதற்குரிய தொகையைப் பெற அடுத்த அரவைப்பருவம் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் இங்குள்ள கரும்பை பிற மாவட்ட ஆலைகளுக்கு அனுப்பிவைக்க ஆட்சியர் அனுமதி அளிக்க வேண்டும்.

ஆட்சியர்: நடப்பு அரவை பருவத்துக்கு அரசு நிர்ணயித்துள்ள டன் ஒன்றுக்கு ரூ.2,650 விலையை அனைத்து ஆலைகளும் வழங்க வேண்டும். இந்த விலையை வழங்க மறுக்கும் ஆலைகள் மீது நடவடிக்கையெடுக்கப்படும். இதுபோல் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

மாதவன்: அரியகோஷ்டி, மானம்பாத்தன் வாய்க்கால் பாசனம் மூலம் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இப் பயிரை காப்பாற்ற வீராணம் ஏரியிலிருந்து, இந்த வாய்க்கால்களில் பிப்ரவரி மாதம் வரை தண்ணீர் விட வேண்டும். கீழ் பரவனாற்று வாய்க்கால் கரைகளை உயரப்படுத்தி, அருவா மூக்கு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ள நீர் புகுவதை தடுக்க முடியும். இந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும்.

ரவீந்திரன்: பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் புதுச்சேரி வரை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கொல்கத்தா தொடங்கி, கடலூர் மாவட்டம், பிச்சாவரம் வரை பக்கிங்ஹாம் கால்வாய் நீண்டுள்ளது.

இந்த கால்வாய் சீரமைப்பை கடலூர் மாவட்டத்துக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும். இதன் மூலம் தேசிய நீர் வழிப்பாதையில் கடலூர் மாவட்டம் இணைக்கப்பட்டு, பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். மேலும் கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் உள் புகுவதும் தடுக்கப்படும்.

குஞ்சிதபாதம்: பெலாந்துறை அணைக்கட்டு மற்றும் பாசன வாய்க்கால்களை சீரமைக்க வேண்டும். சம்பங்கி கிழங்கு விதையை 50 சதவீத மானிய விலையில் வழங்க வேளாண் துறை நடவடிக்கையெடுக்க வேண்டும்.

**கத்தரிக்காய் விலை கடும் வீழ்ச்சி**

அதிக விளைச்சல் காரணமாக கத்தரிக்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. விவசாயிகளிடமிருந்து கிலோ ரூ.1-க்கு விற்பனையானதால் கத்திரிக்காய்களை விளை நிலத்திலேயே கொட்டி வருகின்றனர்.

கடலூர் மாவட்டம் பண்ருட்டி மற்றும் அண்ணாகிராமம் வட்டாரப் பகுதியில் மண் வளம் மற்றும் நீர் வளம் நிறைந்து காணப்படுவதால் விவசாயிகள் கத்தரிக்காய், வெண்டை, பாகல், முருங்கை, புடலை, பீர்கன், கொத்தவரை, முள்ளங்கி, அவரை மற்றும் காலிபிளவர், கோஸ் உள்ளிட்ட தோட்டப் பயிர்களை அதிக அளவில் பயிர் செய்து வருகின்றனர். பண்ருட்டி ரத்தினம் பிள்ளை மார்க்கெட்டில் உள்ள மொத்த வியாபாரிகள் இந்தக் காய்கறிகளை வாங்கி சென்னை, புதுச்சேரி, விழுப்புரம், நெய்வேலி, சிதம்பரம், கடலூர் உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள வியாபாரிகளுக்கும், கடைகளுக்கும் விற்பனை செய்கின்றனர். கடந்த இரு நாள்களாக கத்திரிக்காய் விவை வீழ்ச்சியையடந்து, கிலோ ரூ.1-க்கு விலை போனதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து புவலனூரை சேர்ந்த விவசாயி ராஜு கூறியது: இரண்டு ஏக்கர் நிலத்தில் ஆந்திரா ஒட்டு உஜாலா ரக கத்திரி பயிரிட்டுள்ளேன். நல்ல மகசூல் கிடைத்த நிலையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது வேதனை அளிக்கிறது. இரு தினங்களுக்கு முன் சென்னை கோயம்பேடு சந்தையில் ஒரு மூட்டை ரூ.120-க்கு (75 கிலோ) என 25 மூட்டை விற்பனை செய்தேன். ஆள் கூலி, போக்குவரத்துச் செலவு என கணக்கு பார்த்தால் நட்டம் ஏற்படுகிறது. இதனால் பறித்த கத்திரிக்காய்களை விளை நிலத்திலேயே

கொட்டி  விட்டோம். ஒரு ஏக்கர் கத்தரி பயிருக்கு நடவு முதல் அறுவடை வரை ரூ.40 ஆயிரத்துக்கும் மேல் செலவு செய்ய வேண்டியுள்ளது. கத்தரிக்காய் விலை வீழ்ச்சியால் செலவு செய்த பணத்தைக் கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல விவசாயிகள் செடியுடன் ஏர் உழுது விட்டனர் என அவர் கூறினார்.

## ஆடுதுறை 50 நெல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கூடுதல் மகசூல் தரும் புதிய ரகமான ஆடுதுறை 50 நெல் சாகுபடி குறித்து, காரைக்கால் விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில், 2012-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஆடுதுறை 50 என்கிற புதிய நெல் ரகம் சாகுபடி குறித்தும், உளுந்து, பயறு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கும் வயல் தின விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு நிலையத்தின் தலைவர் ஆ. சுரேஷ் தலைமை வகித்தார். விவசாயிகளிடையே அவர் பேசும்போது, புதிய நெல் ரகம் பயிர் செய்யப்பட்டு அறுவடை செய்திருப்பதன் மூலம், ஹெக்டேருக்கு 6 டன் மகசூல் கிடைக்குமென தெரிய வருகிறது. எதிர்காலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதை உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் நிலையத்திலேயே கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நிலையத்தின் சார்பில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயனுள்ள திட்டங்கள் குறித்து நிலைய முதல்வர் ந.ராஜேந்திரன் விளக்கினார். சாகுபடி தொழில்நுட்பம் குறித்து நிலையத்தின் உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. செந்தில்குமார் பேசும்போது, ஆடுதுறை 50 என்ற ரகம் 150 நாள் பயிர். பூச்சியினால் ஏற்படும் நோயை எதிர்க்கும் சக்தி கொண்டது. சி.ஆர். 1009-க்கு மாற்றாக ஆடுதுறை 50 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த ரகத்தை பயிரிடுவதன் மூலம் நல்ல லாபம் பெறலாம். தேவையான ஆலோசனைகளை நிலையத்தின் மூலம் பெறமுடியும் என்றார். பயிர் பாதுகாப்பு உத்திகள் குறித்து பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் வெ.சுமதி பேசினார். உளுந்து, பயறு சாகுபடி முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது. 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## குமரி மாவட்ட அணைகளில் நீர்மட்டம் சரிவு

**நாகர்கோவில்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சி" வாரங்களாக வெயில் கொளுத்துகிறது. இதனால் அணைகளுக்கு நீர் வரத்து குறைந்து நீர் மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. தற்போது அணைக்கு 139 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பாசனத்துக்காக 140 அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 19.95 அடியாக குறைந்துள்ளது. இதுபோ" பெருஞ்சாணி அணைக்கு 80 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பாசனத்துக்காக 250 கனஅடி தண்ணீர் டறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 53.85 அடியாக உள்ளது.சிற்றாறு-1 அணைக்கு 139 கன அடி தண்ணீர் வருகிறது. 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணை நீர்மட்டம் 10.82 அடியாக உள்ளது. விவசாயத்துக்கு எந்த பகுதியில் தண்ணீர் தேவை இருக்கிறதோ அதை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படுவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பயிர்கடன் வழங்க காலதாமதமானால் அதிகாரிகள் மீது நடவடிக்கை என எச்சரிக்கை

**விழுப்புரம்:** மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் கலெக்டர் சம்பத் தலைமையில் நடந்தது.வேளாண் இணை இயக்குனர் சக்கரவர்த்தி, துணை இயக்குனர் ராஜசேகர் மற்றும் வேளாண் அலுவலர் கதிரேசன் முன்னிலை வகித்தனர்.

கிராமங்களில் உள்ள ஏரிகளை தூர்வாரி பராமரிக்க வேண்டும். தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கு அரசு நிர்ணயித்துள்ள புதிய விலையை வழங்க வேண்டும். தனியார் பஸ்களில் திடீரென உயர்த்திய கட்டணத்தை உடனே குறைக்க வேண்டும். அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பயிர் கடன்கள் வழங்க அதிகாரிகள் தாமதப்படுத்துவதால் விவசாயிகள் பாதிக்கின்றனர் என சங்க பிரதிநிதிகள் பேசினர்.

கலெக்டர் சம்பத் பேசியதாவது:கூட்டுறவு வங்கிகளின் அதிகாரிகள், விவசாயிகளுக்கு பயிர் கடன்களை துரிதமாக வழங்க வேண்டும். காலதாமதம் மேற்கொள்ளும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், ஏரிகளில் மண்டி கிடக்கும் காட்டாமணக்கு செடிகள் அப்புறப்படுத்தப்படும். தனியார் பஸ்களில் அரசு அறிவிப்பின்றி உயர்த்தப்பட்ட கட்டணத்தை உடனடியாக குறைக்க பஸ் உரிமையாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள் ளது. இவ்வாறு கலெக்டர் சம்பத் பேசினார்.மின்வாரிய மேற்பார்வை பொறியாளர்கள் அசோகன், சிவராஜ், முன்னோடி வங்கி மேலாளர் ராஜேந்திரன், துணை இயக்குனர்கள் ராசு, ராஜேந்திரன், பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் ஜெயராமன், முன்னோடி விவசாயிகள் ராமசாமி, ரங்கநாதன், ரவி நயினார், மணி, ராமராஜன், ரங்கராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

**செஞ்சி** :செஞ்சி அடுத்துள்ள செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.உப தலைவர் ரமேஷ் தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். துணை பொது மேலாளர்கள் கரும்பு விஜயகுமார், உதவி பொது மேலாளர் பாஸ்கர்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆராய்ச்சி துணை பொது மேலாளர் ஜெயபால், மேலாளர் சீனுவாசன், விரிவாக்க மேலாளர்கள் வெங்கடேசப்பெருமாள், ராஜேஷ்கண்ணன், மனித வள மேம்பட்டுத்துறை ஸ்ரீவத்சன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.நீடித்த நிலையான

கரும்பு சாகுபடி திட்டம், சொட்டு நீர் பாசனம், நிழல் வலை மூலம் செதில் பரு நாற்று நடவு. இயற்கை இடுபொருட்கள், உயிர் உரங்கள் உபயோகித்தல், மண்ணின் தன்மை, பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பயிற்சி அலுவலர் வித்யா நன்றி கூறினார். 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## கால்நடை சிகிச்சை முகாம்

**விழுப்புரம்**:திருக்கோவிலூர் கோட்டம் எலவனாசூர்கோட்டை அடுத்த புகைப்பட்டி கிராமத்தில் கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது.விழுப்புரம் கால்நடை மருத்துவ பல்கலைக் கழக விரிவாக்க கல்வி இயக்குனர் சந்திரகாசன் தலைமை தாங்கினார். கால்நடைகளில் கருதங்காமை குறித்து, மாவட்ட கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் தேவராஜன் சிறப்புரை நிகழ்த்தினார்.கால்நடை பல்கலைக் கழக பயிற்சி மைய பேராசிரியர்கள் வேங்கடபதி, பழனிவேல், கண்ணன், சத்திய மூர்த்தி, புதுவாழ்வு திட்ட பால்வள ஆலோசகர் டாக்டர் தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர்கள் மகேந்திரன், குபேந்திரன், கால்நடை உதவி மருத்துவர் இளவரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மலடு நீக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்பு கால்நடை தீவன நிறுவனத்தின் சார்பில் விவசாயிகளுக்கு தலா 10 கிலோ கலப்பு தீவனம் வழங்கினர்.

## பாகற்காய் உற்பத்தியில்விவசாயிகள் ஆர்வம்

**கூடலூர்** : கூடலூரில் கோடை காலத்தில் விளையு பாகற்காய் உற்பத்தியில், விவசாயிகள் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.கூடலூர் கோடையில் தாக்கம் மெல்ல வரத்துவங்கி உள்ளதால், பெரும்பாலான விவசாயிகள் பாகற்காய் விவசாயத்தில், ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக, பாகற்காய் விதைகளை 10 மணி நேரம் தண்ணீரில் ஊர வைத்து,வடிகட்டி, 24 மணி நேரம் துணியில் கட்டி வைக்கின்றனர். பின், சாணம் மற்றும் மண் கலந்து அடைக்கப்பட்ட பாலித்தீன்

பைகளில், தலா இரண்டு விதைகள் வீதம் விதைக்கின்றனர். அதில் உற்பத்தி செய்யப்படும், நாற்றுகளை விவசாய நிலங்களில் நடவு செய்து, பந்தல் அமைத்து வருகின்றனர். புளியாம்பாறை பகுதியில் இதற்கான பணிகள் ஜரூராக நடந்து வருகிறது.

## கருகிய பயிர்களுக்கு இன்சூரன்ஸ் தொகை

**காரியாபட்டி**: கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக, உரிய நேரத்தில் மழை பெய்யாததால், நெல் பயிர்கள் பாதியிலே கருகின. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, கடனை திருப்பி செலுத்த முடியாமல், பிழைப்புக்கு, வெளியூர்களுக்கு செல்ல நேர்ந்தது. இதிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க, பயிர்களுக்கு, இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்பட்டது. நெல் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் பிரிமியம் செலுத்தியிருக்கும் பட்சத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்கு, இன்சூரன்ஸ் தொகை வழங்கப்படும். வழக்கம்போல் இந்தாண்டும் பருவ மழை பொய்த்ததால் ,நெல் பயிர்கள் கருகின. பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் வழங்கும் நிகழ்ச்சி, காரியாபட்டி வேளாண் கூட்டுறவு வங்கியில் நடந்தது. தலைவர் விஜயன் தலைமை வகித்தார். மாநில பொதுக்குழு உறுப்பினர் பழனி, துணை தலைவர் ராஜாங்கம், இயக்குனர்கள் சலீம்சேட், திருவாசகம், முத்திருளன், ஆறுமுகம், முருகேசன் முன்னிலையில் 268 பயனாளிகளுக்கு ரூ. 29 லட்சத்து 15 ஆயிரத்து 354 பட்டுவாடா செய்யப்பட்டது.

## பழங்குடியினருக்கு வேலை அளிக்கும் பாக்கு உற்பத்தி தொழில்

**பந்தலூர்** :பந்தலூர் அருகே எருமாடு, அய்யன்கொல்லி பகுதிகளில் பழங்குடியினரின் வேலைவாய்ப்பில் பாக்கு சீசன் முக்கிய பங்கு வகிக்கிறது.தற்போது பாக்கு சீசன் களைகட்டியுள்ளதால், இதனை சார்ந்துள்ள தொழிலாளர்களுக்கும் நல்ல வருவாய் கிடைத்து வருகிறது. பாக்கு பறிக்கும் தொழிலாளர்கள் ஒரு கிலோ பச்சை பாக்கிற்கு 3 ரூபாய் கூலியாக வழங்கப்படுகிறது. பச்சை பாக்கு தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி

கிலோவிற்கு 18 முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆனால், தோல் உரிக்கப்பட்ட கொட்டைபாக்குகளுக்கு நல்ல விலை கிடைப்பதால், தோல் உரித்து ஏற்றுமதி செய்யும் பணியில் உள்ளூர் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக எருமாடு, கையுன்னி, அய்யன்கொல்லி உள்ளிட்ட பகுதிகளில் மொத்தமாக பச்சை பாக்கு கொள்முதல் செய்யும் வியாபாரிகள், பழங்குடியினர்களிடம் பாக்கு தோல் உரிக்க ஒப்படைக்கின்றனர். 3 கிலோ பச்சை பாக்கு உரித்தால், ஒரு கிலோ கொட்டைபாக்கு கிடைக்கும். ஒரு கிலோ உரிப்பதற்கு, 6 ரூபாய் கூலியாக வழங்கப்படுகிறது.மார்க்கெட்டில் தோல் உரித்த கொட்டைபாக்கு 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த வேலை வாய்ப்பால், பழங்குடியின மக்களின் வருமானமும் பெருகி வருகிறது. இதனால், பழங்குடியின மக்கள் இந்த பணியை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயறுவகை பயிர் உற்பத்தி 3.8 லட்சம் டன் பற்றாக்குறை வேளாண் சாகுபடி

திருச்சி, : பயறுவகை பயிர்கள் உற்பத்தியில் 3.8லட் சம் டன் பற்றாக் குறை ஏற்படுவதாக வேளாண் கல்லூரி முதல்வர் தகவல் தெரிவித்தார்.

குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறுவகை பயிர்களில் ஒரு சேர முதிரும் ரகங்களை இயந்திரமயமாக்கல் மூலம் சாகுபடி என்ற தலைப்பில் வேளாண் துறை அலுவலர்களுக்கு பயிற்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ராமசாமி தலைமை வகித்து பேசியதாவது:

தமிழ்நாட்டில் பயறு வகை பயிர்கள் 6.9 லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு ஆண்டொன்றுக்கு 3.2லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் தேவையோ ஆண்டொன்றுக்கு 7லட்சம் டன் ஆகும். எனவே 3.8லட்சம் டன் பற்றாக் குறை ஏற்படுகிறது என்றார்.

திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் குருராஜ்சிங் பேசுகையில், பயறுவகை பயிர்களில் உற்பத்தியில் உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் தரமான விதைகளை உபயோகிக்க வேண்டும். சரியான பயிர் எண்ணிக்கை பராமரித்தல், இலைவழி நுண்ணுட்டம், ஒருங்கிணைந்த களை நிர்வாகம், மானாவாரி சாகுபடியில் உயரிய தொழில் நுட்பங்களை கடைபிடித்தல் வேண்டும் என்றார்.

பேராசிரியர் கதிரேசன் பேசுகையில், பயறுவகை பயிர் வளர்ச்சிக்கு 16 ஊட்டச்சத்துக்கள் இன்றியமையாததாக கருதப்படுகிறது. பயிர் வளர்ச்சிக்கு தேவைப் படும் அளவை பொறுத்து ஊட்டச் சத்துக்களை அளிக்க வேண்டும்

என்றார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர்கள் சோமசுந்தரம், முனைவர் சுதாகர் ஆகியோர் பேசுகையில், திருச்சி மாவட்டத்தில் ஒரே சமயத்தில் அறுவடை செய்யக்கூடிய உளுந்து ரகங்களான கோ-6, வம்பன்-6 ஆகியவை மூலம் 62.5 ஏக்கரில் விவசாயிகள் வயலில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரங்கள் மூலம் சாகுபடி செய்யும் தொழில் நுட்பங்கள் மூலம் செயல் விளக்கம் செய்து காட்டப்படும் என்றனர்.

**கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம்பிப். 3ல் துவக்கம்**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் கோழிக் கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.புதுகை மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பிப்ரவரி மாதம் 3ம் தேதி முதல் 16ம்தேதி வரை இரு வார கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் கால்நடை மருந்தகங்களின் மூலம் தொடர்புள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளது. எனவே கோழி வளர்ப்போர் தடுப்பூசி போட்டுக்கொள்ள கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாமிற்கு தங்கள் கோழிகளை கொண்டு வந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தகவலை கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

**கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

விருதுநகர், : இலவச கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. தமிழகம் முழுவதும் ஜன.24(இன்று) மற்றும் 25ம் தேதிகளில் (நாளை) கறவை மாடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்களும் நடைபெற உள்ளது. இலவச ஆடு, மாடுகள் பெற்ற பயனாளிகள் மட்டுமின்றி, அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கழிச்சல் நோய் பரவாமல் தடுக்க 20 லட்சம் கோழிகளுக்கு அடுத்த மாதம் தடுப்பூசி**



கோவை: தமிழகத்தில் 20 லட்சம் புறக்கடை கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி போட உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை, கரூர் மாவட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணை உள்ளது. இங்கே தினமும் சுமார் 12 லட்சம் கறிக்கோழி உற்பத்தியாகிறது. மாநில அளவில் கிராமங்களில் நாட்டு கோழி வளர்ப்பு பரவலாக நடக்கிறது.

இப்படி கிராமங்களில் சுமார் 50 லட்சம் கோழிகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் தினமும் சுமார் 30 ஆயிரம் கோழி இறைச்சிக்காக கொல்லப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. முறையான நோய் தடுப்பு இன்றி புறக்கடையில் கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

ஈரோடு, கோவை, திருப்பூர், நாமக்கல், தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் புறக்கடை கோழிகளுக்கு கழிச்சல் நோய் (ராணிக்கட்) பரவியிருப்பதாக தெரியவந்துள்ளது. 2 சதவீத புறக்கடை கோழிகள் கழிச்சலில் பாதிக்கப்பட்டு இறந்திருப்பதாக தெரிகிறது. ஒரு கோழிக்கு நோய் பரவினால் அந்த வளாகத்தில் உள்ள மற்ற கோழிகளும் நோய் தாக்கி இறந்து விடுகின்றன. தற்போது, கோடைக்கு முன்பே வெயில் கொளுத்த துவங்கி விட்டதால் கழிச்சல் நோய் மேலும் வேகமாக பரவி விடும் அபாயம் உள்ளது. எனவே தமிழக கால்நடை பராமரிப்பு துறையினர் கழிச்சல் நோய் தடுப்பூசி பணியை வரும் 3ம் தேதி துவக்கவுள்ளது. நகர்ப்பகுதி தவிர அனைத்து கிராமங்களிலும் கால்நடை பராமரிப்பு குழுவினர் இந்த தடுப்பூசி பணியை இலவசமாக நடத்தவுள்ளனர். 14 நாட்களில் சுமார் 20 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போடப்படும்.

இன்றைய வேளாண் செய்திகள்

## ஏப்ரல்–டிசம்பர் மாத காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 59 சதவீதம் அதிகரிப்பு



புதுடெல்லி

ஏப்ரல்–டிசம்பர் மாத காலத்தில் ரூ.2,532 கோடிக்கு வெங்காயம் ஏற்றுமதி ஆகியுள்ளது. சென்ற நிதி ஆண்டின் (2012–13) இதே காலத்தில் ஏற்றுமதி ரூ.1,591 கோடியாக இருந்தது. ஆக, ஏற்றுமதி 59 சதவீதம் அதிகரித்துள்ளது.

9.87 லட்சம் டன்

கணக்கீட்டு காலத்தில் அளவின் அடிப்படையில் வெங்காயம் ஏற்றுமதி குறைந்துள்ளது. டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் 9.87 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 14.04 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டில் நாட்டின் பல பகுதிகளில் வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்தது. முக்கிய நகரங்களில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.100 என்ற அளவையும் எட்டியது. இதனால் ஏற்றுமதியை கட்டுப்படுத்தி, உள்நாட்டில்

சப்ளையை அதிகரிக்கும் விதமாக 2013 செப்டம்பரில் வெங்காயம் ஏற்றுமதிக்கு குறைந்தபட்ச விலையை மத்திய அரசு நிர்ணயித்தது.

அதன் பிறகு பல முறை இந்த விலை உயர்த்தப்பட்டு ஒரு டன் வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலை 1,150 டாலர் வரை அதிகரிக்கப்பட்டது. கடந்த டிசம்பர் 16 அன்று விலை 800 டாலராக குறைக்கப்பட்டது. அடுத்த இரண்டு தினங்களில் (டிசம்பர் 19) விலை 350 டாலர் அளவிற்கு குறைந்தது. உள்நாட்டில் வெங்காயம் விளைச்சல் அதிகரித்து சப்ளை சீரடைந்ததால் டிசம்பர் 26–ந் தேதியன்று குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 150 டாலராக குறைக்கப்பட்டது. அதன் பிறகு வெங்காயம் ஏற்றுமதி அதிகரிக்க தொடங்கியது.

**மொத்த விற்பனையில்...**

அதே சமயம் மொத்த விற்பனையில் வெங்காயம் விலை சற்று உயர்ந்துள்ளதாக தெரிகிறது. லாசல்கான் மண்டியில் கடந்த மாதம் ஒரு கிலோ வெங்காயம் ரூ.10–ஆக இருந்தது. தற்போது விலை ரூ.11.25–ஆக அதிகரித்துள்ளது. கடந்த முழு நிதி ஆண்டில் ரூ.2,295 கோடி மதிப்பிற்கு மொத்தம் 18.22 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மேம்பாட்டு அறக்கட்டளையின் அண்மைக் கால புள்ளிவிவரம் ஒன்றில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**நடப்பு நிதி ஆண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ரூ.15,000 கோடியை எட்ட வாய்ப்பு**



**கொச்சி**

நடப்பு நிதி ஆண்டில் (2013–14) நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ரூ.15,000 கோடியை எட்ட வாய்ப்புள்ளது. குறைந்தபட்சமாக ரூ.12,000 கோடிக்கும், அதிகபட்சமாக ரூ.15,000 கோடிக்கும் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாகும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த நிதி ஆண்டில் (2012–13) ரூ.11,171 கோடி அளவிற்கு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**எட்டு மாதங்களில்...**

இந்த நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாதங்களில் ரூ.8,377 கோடிக்கு 5.08 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாகியுள்ளன. முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.5,732 கோடிக்கு 3.98 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி நன்கு அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் இந்திய சீரகம், புதினா தயாரிப்புகள் மற்றும் மிளகாய்க்கு தேவைப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதே இதற்கு காரணம். மேலும் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவும் ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது.

கணக்கீட்டு காலத்தில் சீரகம், புதினா ஏற்றுமதி மிக விறுவிறுப்பாக நடைபெற்றுள்ளது. அடுத்தபடியாக மிளகாய் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தெலுங்கானா போராட்டம் காரணமாக செப்டம்பர் மாதம் வரை மிளகாய் ஏற்றுமதி மந்தமாக இருந்ததாக தெரிகிறது. சிரியாவில் ஏற்பட்ட கலவரங்கள் மற்றும் துருக்கி, சீனாவில் உற்பத்தி சரிவடைந்தது போன்ற காரணங்களால் சர்வதேச சந்தையில் இந்தியாவின் சீரகம் சப்ளை அதிகரித்தது. அதாவது மதிப்பு, அளவு அடிப்படையில் நமது சீரகம் ஏற்றுமதி 90 சதவீதம் உயர்ந்துள்ளது. மார்ச் இறுதியில் சீரகம் ஏற்றுமதி மட்டும் ஒரு லட்சம் டன்னை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### புதினா தயாரிப்புகள்

நவம்பர் வரையிலான எட்டு மாதங்களில் புதினா தயாரிப்புகள் அளவின் அடிப்படையில் 126 மடங்கு உயர்ந்துள்ளது. அதே சமயம் மதிப்பின் அடிப்படையில் 61 சதவீத வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் விலை குறைந்ததே இதன் பின்னணியாகும். மேலும் செயற்கை புதினா பொருள்களால் கடும் போட்டி உருவாகியுள்ளதாக தெரிகிறது. ஏப்ரல்–நவம்பர் காலத்தில் மிளகு, ஏலக்காய் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது.

### அதிக விலை காரணமாக கலப்பு உரங்கள் விற்பனை சரிவு



ஐதராபாத்

யூரியா அல்லாத உரங்களின் விலை அதிகமாக உள்ளது. எனவே விவசாயிகள் மானிய விலையில் கிடைக்கும் யூரியாவைத்தான் அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனால் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கலப்பு உரங்களின் விற்பனை சரிவடைந்துள்ளது. இந்நிலையில் கலப்பு உரங்களை தயாரிக்கும் நிறுவனங்கள் லாப வரம்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

சிறப்பான பருவமழை காரணமாக உர விற்பனை அமோகமாக இருக்கும் என நிறுவனங்கள் எதிர்பார்த்தன. ஆனால் இதற்கு மாறாக கலப்பு உரங்கள், குறிப்பாக டி.ஏ.பி., விற்பனையாகாமல் பெருமளவு தேங்கியுள்ளன. 50 கிலோ யூரியா விலை ரூ.284–ஆக உள்ளது. ஆனால் 50 கிலோ டி.ஏ.பி. உரத்தின் விலை ரூ.1,180–ஆக

உள்ளது. விலை நிர்ணயத்தில் அரசுக் கட்டுப்பாடுகள் உள்ளதால் யூரியா விலை மிக குறைவாக உள்ளது. சந்தை நிலவரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்படுவதால் மற்ற உரங்களின் விலை மிகவும் அதிகமாக உள்ளது.

கடந்த டிசம்பர் மாத இறுதியில் டீ.ஏ.பி. உரம் விற்பனை 18 சதவீதம் சரிந்து 55.30 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. என்.பி.கே. உர விற்பனை 3 சதவீதம் குறைந்து 52.60 லட்சம் டன்னாக உள்ளது. டிசம்பர் வரையிலான ஒன்பது மாத நிலவரத்தின் அடிப்படையில், மார்ச் இறுதியில் கலப்பு உரங்களின் விற்பனை 1.50 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உரங்களின் விற்பனை சென்ற நிதி ஆண்டில் (2012–13) 1.70 கோடி கோடி டன்னாகவும், அதற்கு முந்தைய ஆண்டில் (2011–12) 2.20 கோடி டன்னாகவும் இருந்தது.

**வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கவேண்டும் குறைவு தீர்வு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**



**வேலூர்,**

வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக வழங்கவேண்டும் என்று குறைவு தீர்வு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>குறைதீர்வு நாள் கூட்டம்</u>

வேலூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகளின் குறைதீர்வு நாள் கூட்டம் கலெக்டர் நந்தகோபால் தலைமையில் நேற்று நடந்தது. இதில் வேலூர்

மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை வைத்து பேசினர். அதற்கு அதிகாரிகள் அளித்த பதில்கள் விவரம் வருமாறு:–

விவசாயி:– வேலூர் மாவட்டம் கடந்த 13 வருடமாக சரியான நேரத்தில் மழை பெய்யாமல், வறட்சி மாவட்டமாக உள்ளது. சென்ற வருடம் தமிழக அரசு வேலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க உத்தரவிட்டது. அப்போது எங்களுக்கு உடனடியாக நிவாரணம் கிடைத்தது. அதுபோல இந்த வருடமும் எங்களுக்கு நிவாரணத் தொகை பொங்கல் பண்டிகைக்கு முன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம் ஆனால் கிடைக்கவில்லை. இந்த வருடம் போன வருடத்தை காட்டிலும் அதிகமான வரட்சி நிலவுகிறது. அதனால் உடனடியாக நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதிகாரி:– வேலூர் மாவட்டத்தில் உள்ள வறட்சி நிலவிய இடங்களை எல்லாம் தேர்வு செய்து ஆய்வு நடத்தினோம். ஆய்வின் அறிக்கையை மேல் அதிகாரிகளுக்கு சமர்ப்பித்து விட்டோம். நிதி வந்தவுடன் பங்கிட்டு தருகிறோம்.

விவசாயி:– ராணிப்பேட்டை சுற்றுவட்டாரத்தில் உள்ள நவலாக் பணியாளர்களுக்கு கடந்த 3 மாதமாக சம்பளம் வழங்கவில்லை.

கலெக்டர்:– அரசுக்கு பரிந்துரை செய்கிறேன்.

விவசாயி:– ஆம்பூர் பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்க வேண்டும். அதிகாரி:– உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயி:– நெமிலி ஒன்றியம், காவேரிப்பாக்கம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கபடுவதில்லை. அதிகாரி:– வழங்க ஏற்பாடு செய்ப்படும்.

விவசாயி:– வேலூர் மாவட்டத்தில் இந்த வருடம் பருவ மழை பொய்த்தது. நெல் பயிர் முதல் தென்னை மரம் வரை அனைத்தும் தண்ணீர் சரியான நேரத்தில் கிடைக்காமல், பட்டுபோகும் சூழ்நிலையில் உள்ளது. மேலும் 750 அடி ஆழத்திற்கு

ஆழ்துணை கிணறு அமைத்தாலும் குடிநீர் வரவில்லை. அதனால் பொதுமக்கள் முதல் கால்நடைகள் வரை மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். அதனால் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.10 ஆயிரத்தை நிவாரணத் தொகையாக வழங்க வேண்டும்.

அதிகாரி:– அரசிடம் பரிந்துரை செய்யப்படும்.

<u>குரங்குகள் தொல்லை</u>

விவசாயி:– மாதனூர் பகுதி சுற்று வட்டார கிராமத்தில் குரங்குகளில் தொல்லை அதிகமாக காணப்படுகிறது. குரங்குகள் வீட்டின் உள்ளே சென்று அங்கு வைத்துள்ள அரிசி, தானியங்கள், தின்பண்டங்கள் எல்லாம் தூக்கி சென்று சாப்பிட்டு விடுகிறது. மேலும் தெருவில் 200–க்கும் மேற்பட்ட குரங்குகள் உலா வருகின்றன. இதனால் பொதுமக்கள் எப்போதும் கையில் தடிகளை வைத்து குரங்குகளை விரட்டி வருகின்றனர்.

அதிகாரி:– விரைவில் வன அலுவலர்களுக்கு தகவல் தெரித்து குரங்குகள் பிடிக்கப்படும்.

விவசாயி:– ஆம்பூர் பகுதியில் உள்ள விவசாயிகள் வாழைகன்றுகளை தோட்டக்கலைத்துறையினரிடம் 6 முதல் 8 மாதமாதமாக கேட்டு வருகிறோம். ஆனால் எங்களுக்கு இதுவரை வாழைக்கன்றுகள் வழங்கப்படவில்லை, மேலும் மானியமாகவாறு தாருங்கள் என்று கேட்டாலும் தரஇயலாது என்று கூறுகிறார்கள்.

அதிகாரி:– வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

விவசாயி:– பட்டுவளர்ப்புக்கு மானியம் மிகவும் குறைவாக உள்ளது. அதனை சற்று உயர்த்த வேண்டும்.

அதிகாரி:– அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

விவசாயி:– ஜவ்வாதுமலையில் உள்ள மரங்களை வெட்டி சிலர் விற்று வருகின்றனர். அவர்களிடம் கேட்டால் நாங்கள் உரிமையுடன்தான் வேட்டுகிறோம் என்று கூறுகின்றனர். இதை அதிகாரிகளுக்கும் கண்டு கொள்ளவதில்லை.

அதிகாரி:– உடனடியாக வனதுறை போலீஸ் அதிகாரியிடம் தெரிவிக்கப்படும்.

விவசாயி:–வேலூர் மாவட்டத்தில் அதிகமான தோல்தொழிற்சாலை உள்ளது. அதில் உள்ள கழிவுகள் பாலாற்றில் கலந்து மாசு ஏற்படுகிறது. அதனால் சிறு குருவிகள் முதல் பறவை இனங்கள் அழிந்து வருகின்றன. இதை எந்த தொண்டு நிறுவனங்கள் முதல் அதிகாரிகள் வரை கண்டு கொள்வதில்லை. பறவை இனத்தை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரி: நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டத்தில் உதவி கலெக்டர் பலராமன், வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர், திருப்பத்தூர் வனஅதிகாரி தன்க்ர் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் வெங்கடேசன் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.10 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் விலைஉயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**



**கோபிசெட்டிபாளையம்,**

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.10 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது. தொடர்ந்து விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**கொப்பரை தேங்காய்**

கோபிசெட்டிபாளையம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு கோபிசெட்டிபாளையம், மொடச்சூர், சிறுவலூர் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த 68 விவசாயிகள் 336 மூட்டைகளில் கொப்பரை தேங்காய்களை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் கொப்பரை தேங்காய் ஒரு குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 693–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 893–க்கும் விற்பனை ஆனது. சராசரி விலையாக ஒரு குவிண்டால் ரூ.7 ஆயிரத்து 783–க்கு விற்பனை ஆனது.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. இதை திருப்பூர், ஊத்துக்குளி, காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வாங்கிச்சென்றனர். கடந்த வாரத்தைவிட இந்த வாரம் கொப்பரை தேங்காய் ஒரு குவிண்டாலுக்கு ரூ.300 வரை விலை உயர்ந்து விற்பனை ஆனது. தொடர்ந்து கொப்பரை தேங்காய் விலை உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**விலையில்ல ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்**



கோவை

கோவை துடியலூர் அருகே உள்ள சின்னத்தடாகத்தில் தமிழ அரசின் விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் முகாமை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்னாயக் துவக்கி வைத்தார். சின்னத்தடாகத்தில் 164 நபர்களுக்கு 21 லட்சம் செலவில் 656 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்ட ஆடுகளுக்கு பொது உடல் சுகாதார பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க மருந்து அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத்தலைவர் டி.எம்.வேலுசாமி, ஒன்றிய குழுத்தலைவர் வீரபாண்டி விஜயன், மாவட்ட கவுன்சிலர் டி.டி.கே.கதிர்வேல், ஒன்றியகவுன்சிலர் ஆனந்தன், மண்டல் இணை இயக்குனர் டாக்டர்.முத்துகோபாலகிருஷ்ணன், துணை இயக்குனர் சுந்தரராஜன், உதவி இயக்குனர்கள் பழனிசாமி, பெருமாள், காளியப்பன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் வி.ஏ.ஓ.யமுனா கால்நடை மருத்துவர் சாம்ரிச்சர்ட்ஸ், மேகநாதான், செந்தில்குமார், தன்ராஜ் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கல்ந்துகொண்டனர்.

**நாகை மீன்வளத்தொழில் நுட்ப நிலையம் சார்பில் மீன்வள வார விழா**

**நாகப்பட்டினம்,**

நாகை மீன்வளத்தொழில் நுட்ப நிலையம் சார்பில் நடைபெற்ற மீன்வள வார விழாவில் 80 மீனவ பெண்கள் பங்கேற்றனர்.

<u>மீன்வள வார விழா</u>

நாகையில் உள்ள தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் மீன்வளத்தொழில் நுட்ப நிலையம் சார்பில் மீன்வள வார விழா நடைபெற்று வருகிறது. இதில் மீனவ மக்கள், மீன் மற்றும் இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு மீன்வள தொழில் நுட்ப பரிமாற்றல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக நாகையில் உள்ள அக்கரைப்பேட்டை கிராமத்தில் சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல் மற்றும் மதிப்பு கூட்டிய மீன் உணவு பொருட்களை தயாரித்தல் என்ற தலைப்பில் தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடத்தினர். இதில் 80 மீனவ பெண்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சுகாதார முறையில் மீன்களை கையாளுவது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

**<u>மதிப்பு கூட்டிய மீன்உணவு</u>**

மேலும் மதிப்பு கூட்டிய மீன் உணவு பொருட்களான மீன் கட்லட், மீன் கோலா உருண்டை, மீன் சூப் மற்றும் இறால் பக்கோடா போன்றவைகளை தயாரிக்கும் கைவினை பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் மீன்வள தொழில் நுட்பநிலையம் உதவி பேராசிரியர்கள் கணேசன், விஜய்அமிர்தராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் அக்கரைப்பேட்டை கிராம பஞ்சாயத்து தலைவர் மனோகரன், அக்கரைப்பேட்டை பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு செயலாளர் எழிலரசி ஆகியோர் பேசினர். விழாவில் மீன்களின் மருத்துவ பயன்கள் மற்றும் அழியும் நிலையில் உள்ள கடல் வளத்தை பாதுகாத்தல் போன்ற கையேடுகள் பயனாளிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டன.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தைலமரங்கள் வளர்ப்பதை தடை செய்ய வேண்டும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தல்**



புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ராஜசேகரன் பேசியபோது எடுத்த படம்.

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட் டத்தில் தைலமரங்கள் வளர்ப்பதை தடை செய்ய வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

<u>வறட்சி மாவட்டம்</u>

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மனோகரன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கையாக தெரிவித்து பேசியதாவது;-

பொன்னுசாமி, கறம்பக் குடி:- இந்த ஆண்டு பருவ மழை இல்லாததால் புதுக் கோட்டை மாவட்டம் முழு வதும் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண் டும் வறட்சிக் குள்ளானது. தீவனம் இல்லாமல் கால் நடைகளை விற்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தத் தில் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டுள்ளது. எனவே புதுக் கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறி விக்க வேண்டும். பாதிக்கப் பட்ட பயிர்களுக்கு உரிய நிவா ரணம் வழங்க வேண்டும். கால் நடைகளுக்கு மானிய விலை யில் தீவனம் வழங்க வேண்டும். பயிர் கடன்களை முழுவதும் ரத்து செய்ய வேண்டும்.

பயிர் காப்பீடு கிடைக்கவில்லை

முன்னாள் எம்.எல்.ஏ. ராஜசேகரன், ஆலங்குடி:- புதுக்கோட்டை மாவட்டத்தில் வனத்துறை மற்றும் தனியாரும் அதிகமாக தைல மரங்களை வளர்த்து வருகின்றனர். இதனால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதுடன் மழை பெய்வதற்கான வாய்ப்பும் குறைந்து வருகிறது. எனவே இதை தடை செய்ய வேண்டும். ஆழ்குழாய் உள்ள பகுதியிலும், டெல்டா பகுதிகளில் மட்டும் நெல் சாகுபடியாகியுள்ளது. மேலும் இரவு நேரங்களில் கொடுக்கப்படும் இலவச மின்சாரம் எந்த நேரத்தில் வழங்கப்படும் என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

துரைமாணிக்கம், சடைய மங்களம்:- கடந்த ஆண்டு ஆவுடையார்கோவில் பகுதி யில் ஒருவருக்கு கூட பயிர் காப்பீடு கிடைக்கவில்லை. மேலும் தற்போது மழை இல் லாததால் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஏற்படும் குடி நீர் பிரச்சினையை போக்க, இப்போதே அதற்கான ஆய த்த பணியை தொடங்க வேண் டும்.

தூர்வாரப்படாத குளங்கள்

மாரிமுத்து, புதுக் கோட்டை:- மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேலிக்கருவை செடி அதிகம் உள்ளது. இதனை அகற்றிவிட்டு மூலிகை செடி வளர்க்க வேண்டும்.

ஜி.எஸ்.தனபதி, புதுக்கோட்டை:- நிலத்தடிநீர் குறைந்து வருகிறது. இலவச மின்சாரம் முறையாக வழங்கப் படவில்லை. அதை முறைப்படுத்த வேண்டும். மேலும் இலவச மின்சார இணைப்பு பெற பல விவ சாயிகள் பல ஆண்டுகளாக காத்து இருக்கின்றனர். இவர் களுக்கு மின்சார இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் சிறுபாசன குளங்கள் உள்ளன. இவை கடந்த 30 ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் உள்ளது. இதனை தூர்வார சிறப்பு திட்டம் கேட்டுப்பெற வேண் டும். கால்நடை வைத்திருப் பவர்களுக்கும் தீவனம் வழ ங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கிணறுகளை ஆழப்படுத்த வங்கிக்கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

<u>குரங்கு தொல்லை</u>

சுப்பையா, குருங்களூர்:- எனது பகுதியில் உள்ள குருங்களுர், மதகம், இரும்பாநாடு, திருவாகுடி மற்றும் ஏம்பல் ஆகிய ஐந்து பஞ்சாயத்துகளிலும் எந்த வளர்ச்சி பணியும் நடைபெறவில்லை. மேலும் பாசனக் குளங்கள் ஆக்கிரமித்தும், சுத்தப்படுத்தப்படாமலும் உள்ளது. இதை சரிசெய்ய வேண்டும்.

சங்கர், கந்தர்வக்கோட்டை:- எங்கள் பகுதியில் குரங்கு தொல்லை அதிகம் உள்ளது. வயல்களை சேதப்படுத்து வதுடன் வீடுகளுக்குள் சென்று அங்குள்ள தின் பண்டங்களை எடுத்து சென்றுவிடுகிறது. இதை கட்டுப்படுத்த வனத்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு விவசாயிகள் பேசினர். மேலும் கூட்டத்தில் முத்துராமலிங்கம், கோவிந்த ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

**மாதத்தில் 10 நாட்கள் கட்டளை தென்கரை, மேட்டு வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விட வேண்டும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வற்புறுத்தல்**



குளித்தலையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய பொருட்களை கலெக்டர் ஜெயந்தி வழங்கிய போது எடுத்த படம்

**குளித்தலை**

குளித்தலை பகுதி விவசா யத்துக்கு கட்டளை தென்கரை, மேட்டு வாய்க் கால்களில் மாதத்துக்கு 10 நாட்கள் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

<u>குறைதீர்க்கும் நாள் கூட்டம்</u>

கரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் குளித்தலை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதற்கு கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தலைமை தாங்கினார். கரூர் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி அருணா, கரூர் கோட்டாட்சியர் நெல்லை வேந்தன், குளித்தலை கோட்டாட்சியர் சிவசவுந்தர வள்ளி, வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் செந்தில்குமார் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் விவாதங்கள் வருமாறு:-

<u>தண்ணீர் திறந்து விட வேண்டும்</u>

மருதூர் திருநாவுக்கரசு:- காவிரியில் அதிக அளவில் மணல் எடுத்து வருவதால் குளித்தலையில் நிலத்தடி நீர் 15 அடியில் இருந்து 40 அடி வரை குறைந்து விட்டது. குளித்தலையில் குடிப்பதற்கு கூட தண்ணீர் கிடைக்காத நிலை உருவாகும் அபாயம் உள்ளது. இரவு நேரத்தில் காவிரிக்கு சென்று பார்த்தால் ஏராளமான மின் விளக்கு களுடன் இரவு நேரத்திலும் மணல் எடுத்து வருகிறார்கள். குளித்தலை பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு கட்டளை தென்கரை மற்றும் மேட்டு வாய்க்கால்களில் மாதத்திற்கு 10 நாட்களாவது தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றார்.

பொதுப்பணித்துறை அதிகாரி திலகம்:- நாளை முதல் வருகிற 28-ந் தேதி வரை விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும்.

<u>மாதத்திற்கு 10 நாட்கள்</u>

மருதூர் திருநாவுக்கரசு:- தற்போது வாழை குலை தள்ளும் நேரம், கரும்பு பருக்கக்கூடிய நேரம், வெற்றிலை துளிர் விடும் நேரம் இந்த நேரத்தில் வருகிற 28-

ந்தேதிக்கு பிறகு தண்ணீர் கிடைக்காது என்று அதிகாரி அறிவித்தது விவசாயிகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. எனவே மாதத்திற்கு 10 நாட்கள் வீதம் 3 மாதங்களுக்கு குளித்தலை பகுதி விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட பொதுப் பணித்துறை அதிகாரிகள் உத்தரவிட வேண்டும்.

கலெக்டர் ஜெயந்தி:- இது குறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

கவுண்டம்பட்டி சுப்ர மணியன்:- நங்கம் காட்டுவாரி வாய்க்கால் கடைமடையில் இருந்து தூர் வாருவதற்கு போதிய நிதி இல்லை என அதிகாரிகள் கூறுகிறார்கள். எனவே கரூர் மாவட்ட கலெக்டர் நிதியில் இருந்து காட்டு வாரி வாய்க்காலை தூர் வாருவதற்கு நிதி ஒதுக்க வேண்டும்.

திலகம்:- விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் .

பழுதான மின் கம்பங்கள்

கவுண்டம்பட்டி சுப்ர மணியன்:- கவுண்டம் பட்டி பகுதிகளில் மின் கம்பி மற்றும் மின் கம்பங்கள் பழுதடைந்து உள்ளது. இதை மாற்றி கொடுங்கள் என்று குளித்தலை மின்சார வாரியத்தில் கேட்டு 6 மாதங்கள் ஆகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றார்.உடனடியாக கலெக்டர் ஜெயந்தி பழுதடைந்துள்ள மின் கம்பி மற்றும் மின் கம்பங்களை மாற்றி கொடுக்க மின்சார வாரியத்திற்கு உத்தர விட்டார்.

தடுப்பு சுவர்

மகிளிப்பட்டி ஞானவேல்:- சிந்தலவாடி ஊராட்சி மகிளிப்பட்டி களத்துமேடு என்ற இடத்தில் விபத்து ஏற்படும் விதத்தில் பெரிய பள்ளம் உள்ளது. எனவே அந்த இடத்தில் தடுப்பு சுவர் கட்டித்தர வேண்டும்.

கலெக்டர் ஜெயந்தி, சிந்தலவாடி ஊராட்சி நிதியில் இருந்து தடுப்பு சுவர் கட்டி கொடுக்க உத்தரவிட்டார்.

நாய்களை கட்டுப்படுத்த வேண்டும்

மேட்டு மருதூர் வீரமலை:- மேட்டுமருதூர், தண்ணீர்ப் பள்ளி, குமாரமங்கலம் ஆகிய பகுதிகளில் தெரு நாய்கள் சுற்றி திரிகின்றன. மேலும் வாகனங்களில் வரும்போது நாய்கள் குறுக்கே திடீரென்று வந்து விடுகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அவற்றை பிடித்து கட்டுப் படுத்துங்கள் என்று பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடம் கூறினால் அது முடியாது என்கிறார்.

கலெக்டர் ஜெயந்தி:- தெரு நாய்களை பிடித்து குடும்ப கட்டடப்பாடு செய்யலாம். அதைதவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இவ்வாறு விவாதங்கள் நடைபெற்றன.

மானிய விலையில் விவசாய கருவிகள்

இதையடுத்து 7 விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 8 லட்சத்து 3 ஆயிரத்து 80 மதிப்பிலான களை எடுக்கும் கருவி, களை மற்றும் புல் வெட்டும் கருவி, பவர் ஸ்பிரேயர், பவர் டில்லர், பவர் வீடர் ஆகியவற்றை கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.

**வேளாண்மை மற்றும் முன்னுரிமை கடன்களுக்கு ரூ.47 கோடி நிதி ஒதுக்கீடு கலெக்டர் வெங்கடாசலம் தகவல்**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் வேளாண்மை கடன்களுக்கு ரூ.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்று கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

**வங்கியாளர்கள் கூட்டம்**

திண்டுக்கல் மாவட்ட வங்கியாளர்கள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

மாவட்டத்தில் மழை அளவு குறைந்து இருந்தாலும், இந்த ஆண்டு வங்கி கடன் கொடுப்பதற்கான நிதி 23 சதவீதம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அதில், வேளாண்மை மற்றும் முன்னுரிமை கடன்களுக்கு ரூ.47 கோடியே 15 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அவற்றில் வேளாண்மைக்கு 24 கோடியே 73 லட்சமும், வேளாண் சார்ந்த தொழில்களுக்கு ரூ.5 கோடியே 15 லட்சமும், சிறு மற்றும் குறு நடுத்தர தொழில்களுக்கு ரூ.4 கோடியே 63 லட்சமும், இதர முன்னுரிமை கடன்களுக்கு ரூ.12 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

வங்கிகளில் விவசாயிகளுக்கு கடன் கேட்டு விண்ணப்பிக்கும் மனுக்களில் தேவையான ஆவணங்கள் இருந்தால் அதனை நிராகரிக்காமல் கடன் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் பேசினார்.

**கடன் திட்ட புத்தகம்**

இதனைதொடர்ந்து 2014–2015–ம் ஆண்டிற்கான வங்கியாளர்களின் கடன் திட்ட புத்தகத்தை கலெக்டர் வெங்கடாசலம் வெளியிட்டார். அதனை நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சஞ்சீவி பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குனர் அர்ஜுன்முத்தையா, முன்னோடி வங்கி அலுவலர் ஆஷா மற்றும் வங்கி மேலாளர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வறட்சியால் பயிர் கடனை ரத்து செய்ய வேண்டும் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**



சிவகங்கையில் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற்றபோது எடுத்த படம்.

**சிவகங்கை**

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளதால் பயிர்கடனை ரத்து செய்ய வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவசா யிகள் குறைதீர்நாள் கூட்டம் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் செல்லத் துரை, மாவட்டவருவாய் அதி காரி தனபால், விவசாயிகள் சேங்கைமாறன், சந்திரன், ஆபி ரகாம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது:-

சிவகங்கை மாவட்டத்தில் இந்த ஆண்டு போதிய மழை யில்லாததால் தண்ணீர் இன்றி பயிர்கள் காய்ந்து விட்டன. மேலும் நிலத்தடி நீர்மட்டமும்

குறைந்துவிட்டது. இதனால் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. எனவே வைகையாற்றில் குடி நீருக் காவது தண்ணீர் திறந்து விட வேண்டும். தேவ கோட்டை ஒன்றியத்தில் ஏற் பட் டுள்ள வறட்சியையும், குடி நீர் பற்றாக்குறையை சமா ளிக் கும் வகையில் 4 அல்லது 5 பஞ்சாயத்திற்கு ஒரு ஆழ் குழாய் கிணறு அமைத்து தர வேண்டும்.

<u>பயிர்கடன்ரத்து</u>

சென்ற ஆண்டு பயிர்காப்பீடு திட்டத்தில் தேவகோட்டை ஒன்றியத்தில் 16 வருவாய் கிராமங்கள் விடுப்பட்டு விட் டன. எனவே இந்த ஆண்டு இதுபோல் விடுபடாத வகை யில் கணக்கீடு எடுக்க வேண் டும். மேலும் ஒரு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும்.

விவசாயிகள் பெற்ற பயிர் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். விவசாயி களின் குழந்தைகள் வங்கிகளில் பெற்ற கல்வி கடன்களுக்கு உரிய வட்டி செலுத்தாததால் அவர்களின் பெயர்களை வங்கி யின் தகவல் பலகையில் எழுதிவைத்துள்ளனர். அது போல் செய்வதை தவிர்க்க வேண்டும். அவைகளை அப்புறப்படுத்த வேண்டும்.

<u>விதைக்காக ராமநாதபுரம்</u>

விவசாயத்திற்காக நகைக் கடன் பெற்ற விவசாயிகளின் நகைகளை ஏலத்தில் விடுவ தாக வங்கிகள் அறிவிப்பு செய் கின்றன. எனவே அதை நிறுத்த வேண்டும். இளையான்குடி பகுதிகளில் பருத்தி விவசாயம் நடைபெற்று வருகிறது. ஆனால் அவர்களுக்கு தேவை யான விதை போன்றவை சிவகங்கை மாவட்டத்தில் கிடைப்பதில்லை. அவைகளை ராமநாதபுரம் மாவட்டத்தில் தான் பெற வேண்டியநிலை உள்ளது.

விளைந்த பருத்தியை விற் பனை செய்வதற்கும் ராமநாத புரம் மாவட்டத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. எனவே சிவகங்கை மாவட்டத்திலேயே இதற்கான வசதிகளை செய்து தரவேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் மீது அரசிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் தெரி வித்தார். தொடர்ந்து விவசாயி கள் ஏற்கனவே கொடுத்த பொருட்கள் மீதான விவாதம் நடைபெற்றது.

**விவசாயிகளுக்கு ரூ.11¼ கோடி பயிர் காப்பீட்டுத்தொகை கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் தகவல்**



முதுக்கன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகையினை மண்டல இணைப்பதிவாளர் குருமூர்த்தி வழங்கியபோது எடுத்த படம். அருகில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் மயில்சாமி மற்றும் பலர் உள்ளனர்.

**காரியாபட்டி**

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.11 கோடியே 32 லட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட உள்ளதாக கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவா ளர் குருமூர்த்தி தெரிவித் தார்.

காப்பீட்டுத் தொகை

காரியாபட்டி ஒன்றியம் முடுக்கன்குளம், மறைக்குளம், நரிக்குடி ஒன்றியம் பனைக்குடி, நரிக்குடி, பட்டமங்களம், வீர சோழன் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் சார்பில் விவசா யிகளுக்கான பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகை வழங்¢கும் விழா கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் குருமூர்த்தி தலைமையிலும், மாவட்ட மத்திய கூட்டுறவு தலைவர் மயில்சாமி முன்னி லையிலும் நடைபெற்றது. தொடக்க வேளாண்மை கூட் டுறவு

கடன் சங்கத்தின் தலைவர்கள் முடுக்கன்குளம் பாண்டி, நரிக்குடி வீரமணிகண் டன், மறைக்குளம் பிரசாத், பட்டமங்களம் மனோகரன், ஒட்டங்குளம் வீரபாண்டிஆகி யோர் வரவேற்றனர். மண்டல இணைப் பதிவாளர் குரு மூர்த்தி விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீடு தொகையை வழங்கி பேசியதாவது:-

தற்போது காரியாபட்டி, நரிக்குடி, திருச்சுழி பகுதிகளில் விவசாயிகள் மழையின்றி விவ சாயம் செய்ய முடியாத நிலை யில் உள்ளனர். அப்படியே விவசாயம் செய்தாலும், விவ சாய பயிர்கள் மழையின்றி பாதியிலேயே கருகி விடுகின் றன. இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. சென்ற ஆண்டு விவசாயம் செய்தபோது சரியான மழை இல்லாததால் விவசாய பயிர் கள் முற்றிலும் கருகி விட்டன. அப்போது விவசாயிகள் காப் பீட்டு தொகை செலுத்தி வைத் திருந்தனர். இதனடிப்படை யில் தமிழக முதல்வர் உத்தர வின் பேரில் விருதுநகர் மாவட்டத்தில் ரூ.11 கோடியே 32 லட்சம் காப்பீட்டு தொகை வழங்கப்பட உள்ளது.

<u>வேண்டுகோள்</u>

இதில் தற்போது 84 சதவீத விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை ரூ.9 கோடியே 49 லட்சம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங் கங்களின் மூலம்வழங் கப்பட்டு வருகிறது. இதன் மூலம் விவ சாயிகள் தங்கள் இழப்பீடுகளை சரி செய்து கொள்ள ஏதுவாக இருக்கும். இனி வரும் காலங் களிலும் விவசாயிகள் பயிர் களுக்கு காப்பீடு செய்து பயன் பெற வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் பேசி னார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்க செயலாளர்கள் முடுக்கன் குளம் கண்ணன், வேப்பங்குளம் ரஜினி, பட்டமங்களம் வெங் கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை கலெக்டர் மு.கருணாகரன் பேச்சு**



**நெல்லை,**

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன் கூறினார்.

**<u>குறைதீர்க்கும் நாள் கூட்டம்</u>**

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேசுவரி, வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சவுந்திரராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான விவசாயிகள், நெல்லை மாவட்டத்தில் பல இடங்களில் பருவமழை பெய்யாமல் பொய்த்துவிட்டதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும். பயிர் காப்பீடு செய்தும் கருகிய பயிர்களுக்கு இதுவரை காப்பீட்டுத்தொகை கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். மானூர் குளத்திற்கு தண்ணீர் திறந்து விடவேண்டும்.

சிவகிரி தாலுகா பகுதியில் மணல் திருட்டு அதிகமாக நடக்கிறது அதை அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. ஆனால் கரம்பை மண் எடுக்கும் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கூறினார்கள்.

கலெக்டர்:– வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் செய்து நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதற்காக வருவாய்த்துறை அதிகாரிகள், வேளாண்மைத்துறை அதிகாரிகளும் ஆய்வு நடத்தி வருகிறார்கள். 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும். வறட்சி நிவாரணத்தை விரைவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாண்டியன்:– சங்கரன்கோவில் தாலுகாவில் பருவமழை பெய்யாததால் விவசாயிகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர். பயிர் காப்பீட்டு திட்டத்தில் குளறுபடி நடந்து உள்ளது.

<u>நிவாரண தொகை</u>

மாவட்ட வருவாய் அலுவலர்:– பயிர்காட்டு திட்டத்தில் உள்ள நிவாரண தொகை ஒவ்வொரு பிர்க்கா வாரியாக வழங்கப்பட்டு வருகிறது. மணல் திருடுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கரம்பை மண் எடுக்க முறையாக மனு செய்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

குறிச்சி கணேசன்:– நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் நெல்லை மாநகராட்சியில் முறைகேடு நடந்து உள்ளது. மணல் அள்ளுகிறவர்களுக்கு கனிம வளத்துறையினர் உதவியாக இருக்கிறார்கள். பாளையங்கால்வாயில் மனித, இறைச்சி கழிவுகளை கொட்டுவதை தடுக்கவேண்டும். விளைநிலங்கள் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்தவேண்டும். பட்டா மாறுதல் முகாமில் கொடுக்கிற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் பணம் கேட்கிறார்கள். பணம் கொடுக்கவில்லை என்றால் பட்டா மாறுதல் செய்வது கிடையாது. அந்த மனு எங்கே சென்றது என்று

கூட தெரியாமல் ஆகிவிடுகிறது. தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள கருவேலமரங்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பயிர் கடன்

கலெக்டர்:– பட்டா மாறுதல்கள் கேட்டு விண்ணப்பிப்பவர்கள் தங்கள் மனுவுடன் உரிய ஆவணங்களை இணைத்து இருந்தால் உடனே பட்டா மாற்றி வழங்கப்படும்.

விவசாய சங்க தலைவர் கருப்பசாமி:–விவசாயிகள் வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே விவசாயிகளின் பயிர்கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும். விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு வறட்சி நிவாரணம் ரூ.15 ஆயிரம் வழங்கவேண்டும்.

மாடசாமி:– ஈச்சந்தா பஞ்சாயத்து பெரியசாமிபுரத்தில் குடிநீர் கூட இல்லாமல் மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். அந்த பகுதியில் எதிர் எதிரே பஸ் நிறுத்தம் கட்டி உள்ளனர். இதனால் விபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனவே இதில் ஒரு பஸ்நிறுத்தத்தை அகற்றிவிட்டு சிறிது தூரம் தள்ளிக்கட்டவேண்டும்.

முதியோர் உதவி தொகை

கலெக்டர்:– ஒரு இடத்தில் ரோட்டில் எதிர் எதிரே பஸ்நிறுத்தம் அமைக்கக்கூடாது என்று விதியே உள்ளது. எனவே உடனே மாற்றி அமைக்கப்படும்.

வேலுமணி:– நெல்லை மாவட்டத்தில் 65 வயதுக்கு உட்பட்ட முதியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவி தொகை கடந்த 3 மாதங்களாக நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் பலர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

**குமரி மலையோர கிராமங்களில் வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க நடவடிக்கை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**




**நாகர்கோவில்,**

குமரி மலையோர கிராமங்களில் வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் நாகராஜன் கூறினார்.

**விவசாயிகள் கூட்டம்**

நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள நாஞ்சில் கூட்ட அரங்கில் கலெக்டர் நாகராஜன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. இதில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், வேளாண்மை இணை இயக்குனர் நாகமணிபிள்ளை மற்றும் விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் விவசாயிகள் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு அதிகாரிகள் அளித்த பதில்களும் வருமாறு :–

ஏ.வி.எம். கால்வாய்

பாசனசபை தலைவர் வின்ஸ் ஆன்றோ:ஏ.வி.எம். கால்வாயில் ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் பட்டியல் வழங்க வேண்டும்

பத்மநாபபுரம் கோட்டாட்சியர் அருண் சத்யா: ஏ.வி.எம். கால்வாய் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது தொடர்பாக நில அளவர்கள் மூலம் எல்லை நிர்ணயம் செய்து கற்கள் நடப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் குறித்த வரைபடம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி முடிவடைந்ததும், பொதுப்பணித்துறையினரிடம் வழங்கப்படும்.

17 மில்லியன் லிட்டர்

மருங்கூர் செல்லப்பன்: பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து நாகர்கோவிலுக்கு குடிநீருக்காக தினசரி எவ்வளவு தண்ணீர் எடுக்கப்படுகிறது. நிரந்தரமாக தண்ணீர் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியம்: பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணையில் இருந்து நாகர்கோவிலுக்கு குடிநீருக்காக நிரந்தரமாக தண்ணீர் கொடுக்கும் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தவில்லை. முக்கடல் அணையில் இருந்து நாள் ஒன்றுக்கு 17 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து நாகர்கோவிலுக்கு குடிநீருக்காக கொடுத்து வருகிறார்கள்.

செல்லப்பன்: பாசன கால்வாய் மடைகள், குளங்கள் செப்பனிடும் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதா?

அதிகாரி சுப்பிரமணியம்: பாசன கால்வாய் மடைகள், குளங்கள் செப்பனிட இந்த ஆண்டு அரசு ரூ.1 கோடியே 44 லட்சத்து 72 ஆயிரம் ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

தென்னங்கன்று நாசம்

சண்முகம்பிள்ளை: என் நிலத்தில் தென்னங்கன்று நட்டு இருந்தோம். அவற்றை காட்டு பன்றிகள் அழித்து விட்டன. இதே போல் அடிக்கடி ஏற்படுகிறது. இதை தடுக்க நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது மற்ற விவசாயிகளும் எழுந்து குமரி மலையோர கிராமங்களில் பயிரிடப்படும் பயிர்களை வன விலங்குகள் அழித்து விடுகின்றன. மேலும் மாமரத்தில் குரங்குகள் ஏறி மாங்காய்களை தின்று விட்டு செல்கின்றன. இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள்.

கலெக்டர் நாகராஜன்:– வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க மாவட்ட வன அதிகாரியிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கண்டவாறு விவசாயிகள் கேள்விகளுக்கு அதிகாரிகள் பதில் அளித்தனர்.

தூர்வார வேண்டும்

அதன்பிறகு கலெக்டரிடம் விவசாய பிரதிநிதிகள் மனு கொடுத்தனர். அப்போது வெள்ளிச்சந்தை அருகே உள்ள மணவிளையை சேர்ந்த நெல் விவசாயிகள் குழு பொருளாளர் கனி என்ற ராமசுவாமி கொடுத்த மனுவில், 'முட்டம் கிளைக்கால்வாய் 3–வது மடையில் இருந்து பிரிந்து செல்லும் ஊட்டு கால்வாய் மூலம் 35 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக கால்வாய் முழுவதும் புதர் மண்டி மண் மூடி தண்ணீர் பாய்ந்து செல்ல முடியாத நிலையில் உள்ளது. ஆகவே கால்வாயை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்' என குறிப்பிட்டு இருந்தார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர் தாணுபிள்ளை மற்றும் புலவர் செல்லப்பா, பொன்னுலிங்க ஐயன் உள்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நாடு முழுக்கவும் நம்மாழ்வாரை உருவாக்கும் திட்டம்- கடலூர் தமிழ்க் காடு அமைப்பு முயற்சி



இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் இயற்கையோடு இயற்கையாக இணைந்து விட்டார். அவரைப் போன்றே இயற்கையை நேசித்து வருபவர்களை அடையாளம் கண்டு, அவர்களை சிறப்பித்து வருகிறது தமிழ்க் காடு எனும் அமைப்பு.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கடந்த டிசம்பர் 30-ம் தேதி பட்டுக்கோட்டையில் உயிர் நீத்தார். அவரது நினை வேந்தல் நிகழ்ச்சி கடலூர் மாவட்டம் தொழுதூரை அடுத்த ராமநத்தத்தில் இம்மாதம் 18-ம் தேதி நடைபெற்றது.

**தமிழ்க் காடு தொடக்கம்**

தமிழ்க் காடு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அதன் ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், கடலூர் மாவட்டத்தில் நம்மாழ் வாரைப் போன்று இயற்கையை நேசித்து, அதன்படி வாழ்ந்து வருபவர்களை அடையாளம் கண்டு, அவர்களை 'நம்ம ஊரு நம்மாழ்வார்' என அழைத்து நினைவேந்தல் நிகழ்ச்சியின் மூலம் சிறப்பித்தினார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் 125 இயற்கை வேளாண் விவசாயிகள் பங்கேற்றனர். சூழலியல் எழுத்தாளர் நக்கீரன், தோழர் பொழிலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இயற்கை விவசாயி களுக்குப் பருத்தித் துணி அணிவித்து சிறப்பித்தனர்.

**‘உழவன் தாத்தா’**

இதுகுறித்து அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் கூறியதாவது, ‘‘நம்முடைய ‘உழவன் தாத்தா’ நம்மாழ்வார் விட்டுச் சென்றப் பணிகளை நாம் தொடரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இயற்கை வாழ்வியல் அறிஞர் மண்ணுக்கு விதையாக மாறிவிட்டார். இவ்வேளையில் நம்மாழ்வார் போன்று ஒவ்வொரு பகுதியிலும் இயற்கை உழவு, மரம் நடுதல், சித்த மருத்துவம், யோகக்கலை எனப் பல்வேறு இயற்கை சார்ந்த சமூகப் பணிகளை செய்பவர்களுக்கு நம்மாழ்வார் நினைவாக 'நம்ம ஊரு நம்மாழ்வார்' எனப் பருத்தி துண்டு, துணிப்பை, நம்மாழ்வார் பற்றிய நூல் போன்றவற்றை வழங்கிச் சிறப்பிக்கப்படும். இது போன்று ஒவ்வொரு பகுதியிலும் கண்டறிந்து செயல்பட்டால் நம்மாழ்வார் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர முடியும்’’ என்றார்.